வானதி
பதிப்பகம்

திரு.வி.க
மணிமொழிகள்

5-2

திரு. வி. க.
மணிமொழிகள்

தொகுப்பு:

அ. வேதாசலம்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை·17

முதற் பதிப்பு : செப்டம்பர், 1967.
இரண்டாம் பதிப்பு : மார்ச், 1970.
மூன்றும் பதிப்பு : செப்டம்பர், 1972.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 1-75

அச்சிட்டோர் : ஜீவன் அச்சகம், சென்னை-5. (1798)

உள்ளே

திரு. வி. க. மணிமொழிகள்

அன்னைத் தமிழின் ஆட்சி

அன்னைக்கு அரியணை!

தமிழ்த் தாயைப் புதுப் போர்வையால் ஒப்பனை செய்து அரியாசனத்தமர்த்தச் சூள் கொண்டெழுங்கள்; எழுங்கள்; பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்.

பிற மொழிக் கலைகள் பெயர்ப்பீர்!

காலதேச வர்த்தமானத்துக்கேற்ற கலை நூல்கள் தமிழில் இல்லையேல், அவற்றை யாக்கப் புகுவதே அறிவுடைமை. நில நூல், வான நூல், உயிர் நூல், பொருள் நூல் முதலியவற்றைப் பிற மொழிகளினின்றும் பெயர்த்தெழுதிக் கொள்ளலாம்.

பிற மொழிக்கு அடிமையா?

ஜெர்மானியர், பிரஞ்சுக்காரர் முதலியோர் எம்மொழியில் கல்வி பயில்கிறார்? அவர் தத்தம் தாய்

மொழியிலேயே கல்வி பயில்கிறுர். தமிழன் மட்டும் ஏன் பிறமொழி வாயிலாகக் கல்வி பெற வேண்டும் என்பது விளங்கவில்லை. தமிழன் அடிமைப் பேய்வாய்ப்பட்டுக் கிடக்கிருன்.

மொழிப் பற்றே நாட்டிற்கு முதல்

தாய் மொழியினிடத்தும் அன்பில்லா ஒருவன் தாய் நாட்டின் அன்பனுகான். நாட்டன்பிற்கு நாட்டு மொழி அன்பே உயிர்—உயிர் என்க.

முன்னேற்றம் மொழியிலே

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலேயைப் பொறுத்தே நிற்கும்.

இயற்கை முறை

நாம் தமிழ் மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறுதலே சிறப்பு. அதுவே இயற்கை முறை.

எக்கலேயும் தமிழில் இனிக்கும்

நமது தாய்மொழியின் தொன்மை சிறப்பு முதலியவற்றை விரித்துரைக்க வேண்டுவதில்லே. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெரும் பெருங் காப்பியங்களே அணிந்தவள் நம் தமிழன்னே. அவ்வளமுடைய தமிழில் எக்கலேயை நுழைத்தல் முடியாது?

மொழி வஞ்சனே நாட்டு வஞ்சனே

நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டது. அம்மொழியை வஞ்சிப்பது, பிறந்த நாட்டை வஞ்சிப்பதாகும்.

தமிழே தலைசிறந்த இன்பம்

தமிழ் இளைஞர்களே; பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்; தமிழ் இன்பத்தினும் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ?

காவிய இன்பம்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்' — என வருஉந் தமிழை—தமிழ்ப் பாரதியை—நோக்குங்கள்; தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்.

வாழ்விற்குரிய இன்பத் துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றும் கூறலாம்.

பாட்டு இன்பம் பருக......

நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் யாண்டுச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களிடையன்றோ?

இப்பொழுது தமிழ் இலக்கியங்கள் தமிழ் இளைஞரால் பெரிதும் படிக்கப்படுகின்றனவா? இல்லையே. எனவே, இளைஞர் வாழ்வில் ஒரு பெரும் இன்பத்தை இழப்பவராகிறார்.

தாய்மொழி அன்பு

இவ்வேளையில், நமது தாய்மொழியில் எல்லாக் கலைகளையும் கொணர அறிஞர் முயல்வாராக. இம் முயற்சி தாய்மொழியின் மாட்டுக் கொள்ளும் அன்பைப் பொறுத்து நிற்பது.

தாய்மொழியில் கலைப் பயிற்சி

இளைஞர்களாகிய நீங்கள், 'தாய் மொழியிலேயே கலைகளைப் பயிலல் வேண்டும்'—என்னும் உறுதி கொள்வீர்களானால், தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ் நாடு நாளையே பெற்றுவிடும்.

கவலை – சவலை நீங்க...

தாய்மொழிப் பற்றில்லாத இடத்தில் முன்னேற்ற முயற்சி எங்ஙனம் உருக்கொள்ளும்? முன்னேற்றத்துக்கு உயிர் தாய்மொழி அன்றோ? அதன்மீது கவலை செலுத்தாதிருப்பின் நாட்டின் கவலை எவ்வாறு நீங்கும்?

அயர்லாந்து விடுதலை எப்படி?

அயர்லாந்தின் விடுதலைக்கு அந்நாட்டுத் தலைவர்கள் எவ்வெத் துறையிலோ முயன்றார்கள். அம் முயற்சிகளால் அவர்கள் வெற்றி பெற்றார்களில்லை. இறுதியில் அவர்கள் நாட்டு மொழியில் காதல் கொள்ளலானார்கள்; நாட்டு மொழியை ஓம்பினார்கள். அதனால் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

அன்னை மொழியில் பயில்வதே அறம்

உலகைப் பல நாடுகளாக இயற்கை பிரித்திருக்கிறது. நாடுகள் பலவும் மொழிப் பெயரால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவ்வந்நாட்டின் இயல்புக்கேற்ற வண்ணம் அவ்வம்மொழி அங்கங்கே அமைந்திருக்கிறது. அவ்வந்நாட்டார் அவ்வம் மொழியைப் பயில்வதே அறம். அஃதே இயற்கையோடியைந்து நிற்பதுமாகும். பின்னே போதிய வாய்ப்பும் ஓய்வும் பிறவும் கிடைப்பின், வேறு மொழிகளையும் பயிலலாம்.

தாய்க்கொலை புரிவதா?

இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவளல்லள்; இன்று பிறந்தவளல்லள்; அவள் மிகமிகத் தொன்மையுடையவள்; கலைகளை உடையவள். அவளைக் கொல்வதா ? தாய்க்கொலை புரிவதா தமிழ் வீரம்?

தமிழ் இல்லாத் தமிழகமா?

தமிழ் இறந்தபின் 'தமிழ் மண்' மட்டுமிருந்தென்? மொழியன்றோ நாடு? கலைகளல்லவோ நாட்டின் உயிர்? மொழி இறந்துபடின் நாடும் இறந்துபடுமன்றோ?

தமிழ் நெஞ்சம் தழைக்க!

தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும் தமிழராகப் பார்க்கும் நெஞ்சம் உங்கள்பால் அரும்பி மலர்வதாக. அம்மலர் பிலிற்றும் இன்பத்தேன் தாயின் நோய்களை யெல்லாம் போக்குவதாக.

இயற்கையை மறந்த வாழ்வா ?

நமது நாட்டின் இயல்புக்கு ஏற்ற வண்ணம் நமக்கென மொழி முதலியன ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின்மீது கவலை செலுத்தாது வாழ்வது இயற்கையை மறந்து வாழ்வதாகும்.

நாட்டு மொழியே நல்வாழ்வுக்கு

இயற்கையை மறவாத வாழ்வே உயிர்களைச் செம்மைப்படுத்தும்.....:இயற்கை வாழ்விற்கு முதல் முதல் வேண்டற்பாலது நாட்டுமொழி.

நாட்டு நலனுக்கு நன்மருந்து!

ஒரு நாட்டின் நலன் அந்நாட்டின் மொழிநலத்தைப் பொறுத்து நிற்கிறது. நாட்டு மொழிப் பற்றில்லா நாடு, இன்பம் இழந்து வருதல் ஒருதலை.

தமிழர் யார்?

தமிழர் யார்? தொன்று தொட்டுத் தமிழைத் தாய் மொழியாக்க் கொண்டவரும், தமிழ் நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவருந் தமிழராவர் என்று கூறலாம்.

ஒருமை செய்யும் உயர்மொழி!

பல வழியிலும் சிதறுண்டு கிடக்கும் தமிழ் இனத்தை ஒருமைப் படுத்துவதற்கு உறுகருவியாயிருப்பது தமிழ் மொழியேயாகும், சமயக் கொள்கையிலும் பிறவற்றிலும் மாறுபாடு கொண்டுள்ளவரும் மொழியில் ஒன்றுபடுவர்.

ஆரியர்-தமிழர் பகைமை ஏன்?

தமிழ் நாட்டில் ஆரியர்—தமிழர் பிரிவு பெரிதும் பேசப்படுகிறது. ஆரியர் தமிழ் நாட்டில் குடி புகுந்ததைச் சரித்திர உலகம் கூறிக்கொண்டிருக்கிறது. அதை வாழ்விடை ஏன் பாராட்டிப் பகைமை வளர்த்தல் வேண்டும்?

பிரிவினால் சிறுமையே!

தமிழ் நாட்டில் பிரிவுகள் பெருகப் பெருகத் தமிழ்த் தாய்க்குச் சிறுமையும் பெருகும் என்பதை அறிஞர் கருதுவாராக.

அன்னை மொழி அறியணை ஏற...?

கலைகள் யாவும் தாய்மொழிவழி மாணுக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங்காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறுங் காலமாகும்.

காலத்தை வெல்லும் காவியங்கள்

மனத்துக்கு இயற்கை இன்பமூட்டி ஆறுதலும் அமைதியும் அளிக்கவல்ல முறையில் பழம் பெருந் தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கின்றன. பரபரப்பு மிகுந்த இக்கால உலகில் அத்தகைய காவியங்கள் அமைதல் அரிது.

காவிய நோக்கம் கடைத்தேற...?

கதைக்கும் பதவுரைக்கும், இலக்கணக் குறிப்புக்கு மட்டும் காவியங்களைப் பயில்வதால் காவியங்களின் நோக்கம் நிறைவேருது.

அமிழ் தூறும் 'ழ'கரம்!

தமிழ் யாழையும், குழலையும் என்னென்று சொல்வது? அந்த 'ழ'கரங்களை நினைக்கும்போதே அமிழ்தூறுகிறது.

தமிழனின் காதல்!

தமிழனுகப் பிறந்து தமிழ்ச் சுவையுணர்ந்த ஒருவன் வீடு பேற்றையுங் காதலியான். அவனுக்கு வீடு பேறு தமிழ்மொழி இன்பமேயாகும். அவன் மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டில் தமிழனுகப் பிறந்து தமிழ்ச் சுவை மாந்தி இன்புறவே விரும்புவான்.

கல்நெஞ்சுக்குக் கலைகளா?

ஆவேசத்துக்கும், பரபரப்புக்கும், தீக்கிளர்ச்சிக்கும் இரையாகும் பாழ் நெஞ்சம் கலைகள்மீது செல்லுமா?

ஆங்கிலமும் வேண்டும்

ஆங்கிலம் வேண்டா என்று யான் கூறுகிறேனில்லை. ஆங்கிலம் தற்காலம் உலக மொழியாக வளர்ந்து வரலால் அதனைச் சில உலகியல் வினைகட்கும் உலகத்தோடொத்த வினைகட்கும் பயன் படுத்துவது மாண்பாகும்.

காவியத்தில் கடவுள்!

நம் பெருங்காவியங்களில் உலகைக் காணலாம்; உயிரைக் காணலாம்; கடவுளைக் காணலாம். காவிய இன்பம் பேரின்பம்! பேரின்பம்!

அழியாக் கருவூலம்

தொல்காப்பியர் பொருளின்பமும், திருவள்ளுவர் அறமும், இளங்கோவின் எழிலும், திருஞான சம்பந்தர் பண்ணும், சேக்கிழார் அன்பும், கம்பர் கவியுமல்லவோ நம் பெருஞ் செல்வம். இவையே நமது கருவூலம்—அழியாச் சேமநிதி.

வாழ்வு மணக்க வழி

தமிழனுக்குத் தாய் மொழியினிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ அன்றே அவன் வாழ்வு மணம் பெறும்.

அந்தந்த மொழியில் அந்தந்தக் காவியம்

ஷேக்ஸ்பியரை ஆங்கிலத்தில் படிப்பதே பொருத்தம். காளிதாஸன் சாகுந்தலத்தை அவன் எழுதிய வடமொழியில் பயில்வதே சால்பு; இளங்கோவின் சிலப்பதிகாரத்தை அவர் யாத்த தமிழில் கற்பதே சிறப்பு.

நெடுங்காலப் பயிற்சி தவிர்க்க

இப்பொழுது பள்ளிப் பயிற்சிக்கென ஏறக்குறைய பதினைந்தாண்டுகள் கழிகின்றன. இத்துணை ஆண்டுகள் எற்றுக்கு? தாய்மொழி வாயிலாகக் கல்வி பயின்றால் இத்துணைக் காலம் வேண்டுவதில்லை.

ஆங்கிலேயருக்கே தனி உரிமையா?

தமிழில் "அக்கலை இல்லையே; இக்கலை இல்லையே; சிறப்பான 'ஸைன்ஸ்' என்னும் அறிவுக் கலை இல்லையே!" என்று சிலர் கூக்குரல் இடுகிறார்கள்.

"ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா, எல்லாக் கலைகளும் பிறந்தன?"—என்பதை அச்சகோதரர்கள் உன்னுவார்களாக. வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர் தம் மொழியில் பல கலைகளைப் பெயர்த்தெழுதியுள்ளனர்.

இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகள் எல்லாவற்றையும் ஆங்கிலேயர் மட்டுமா கண்டனர்? இல்லை; இல்லை. சில பிரஞ்சுக்காரரால் காணப்பட்டன; சில ஜெர்மானியரால் காணப்பட்டன; மற்றுஞ் சில வெவ்வேறு நாட்டினரால் காணப்பட்டன. ஆங்கிலேயருஞ் சில கண்டுள்ளனர்.

ஆராய்ச்சி உண்மைகள் அவனிக்கே பொது

ஆங்காங்கே அறிஞர் கண்ட உண்மைகள் மன்பதைக்குரியன. அவற்றை நாடு மொழி என்னுஞ் சிறைகளில் இடுவதினுஞ் சிறந்த மடமை பிறிதொன்றில்லை. அவ்வுண்மைகளை அவரவர் தத்தம் மொழியில் பெயர்த்து அறிவு பெறல் வேண்டும். அவ்வழியிலேயே உலகம் இயங்கி வருகிறது.

ஆங்கிலம் பற்றிய அறியாமை

ஆங்கிலம் என்பது ஒரு நாட்டு மொழி. அம்மொழிப் பயிற்சியிலேயே கல்வியறிவுண்டு என்று கருதுவது அறியாமை.

மொழியில் கட்டுப்பாடா?

கல்வி அறிவை எம்மொழி வாயிலாகவும் பெறலாம். கல்வி அறிவிற்கு 'இம்மொழி', 'அம்மொழி' என்னும் கட்டுப்பாடு இல்லை.

தாய்மொழிக் கல்வியே தக்கது

ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாட்டிலுள்ளோர் தத்தம் தாய்மொழி விடுத்து, ஆங்கிலம் படித்தா கல்வி அறிவு பெறுகிறார்? புதுவைக்கண் உள்ள தமிழ் மக்கள் ஆங்கிலம் கற்று மேல்நாட்டுத் தத்துவங்களை உணர்கிறார்கள்? திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், சேக்கிழார் முதலியோர் ஆங்கிலம் பயின்று உலகம் போற்றுங் காவியங்களை எழுதினர்? ஆகவே, 'ஒரு நாட்டு மொழியே கல்விக்குடையது'—என்று உணர்க. அவரவர் தத்தம் தாய்மொழியிலேயே கல்வி பெறலாம்.

நாட்டில் நல்லாட்சி

அருள் மனமே அறம்

ஒரு நாட்டில் வாழுஞ் செல்வர், செல்வச்செருக்கால் வறியரை வருத்தலாகாது.

வலியர் மெலியரை வருத்தலாகாது.

கற்ருர் கல்லாரை அறிவால் துன்புறுத்தலாகாது.

உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் துன்புறுத்தலாகாது.

ஆண் இனத்தார் பெண் இனத்தாரை ஒறுத்தலாகாது.

குருமார் சீடரை ஏமாற்றலாகாது.

ஒவ்வொருவரும் தாம்தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறுதல் வேண்டும் என்னும் அருள் மனம் உடையராய் வாழ்வது அறம்.

தனக்குத்தானே ஊறு செய்வனே?

ஒருவன் தனக்குத்தானே ஊறு செய்து கொள்ள முயலாததுபோல், ஒரு நாட்டார் தம்முடன் பிறந்த மற்றவர்க்கும் ஊறு செய்யக் கனவிலும் கருதாது வாழ்வதே நல்லது.

உரிமைக் கடவுள் காட்சி!

தனிப்பட்ட வாழ்விலோ, அல்லது நாட்டிலோ, உலகிலோ உரிமைக்குக் கேடு நிகழின் அதன்

பொருட்டுக் கொலை முறையைக் கையாளல் அறியாமை. அன்பால் துன்பம் பொறுத்து, மக்கள் உள்ளத்தெழும் எரியை அருளால் தணித்து, உரிமைக் கடவுள் காட்சி காண முயல்வது அறிவுடைமை.

பிறந்தும் பிணமே!

சுயராச்சியம் என்பது ஒவ்வொருவரது பிறப்புரிமை. இவ்வுரிமை பெருது வாழ்பவன் பிறவி எய்தாதவனுவன். பிறப்புரிமை இழந்தவன் உயிரிழந்த பிணம் போன்றவன்.

கடவுளின் பிள்ளைகளே!

உலகில் வாழும் மக்கள் அனைவரும் கடவுள் பிள்ளைகளேயாவர்.

சுதேசியம் ஓம்புக !

ஆண்டவன் அருளால் எவரெவர் எவ்வெங் நாட்டில் தோன்றுகிருரோ அவரவர் அவ்வங்நாட்டு இயற்கையுடன் அரணுமாறு வாழ்ந்து சுதேசியத்தை ஓம்புதல் வேண்டும். இதுவே கடவுளின் படைப்பு நோக்கம்.

தாயை மறப்பதோ?

தன்னை ஈன்ற தாய்வழி நில்லாது, அவளை மறந்து, அவளைப் பிறர்பால் விடுவதினும் கொடிய பாவம் பிறிதொன்றுண்டோ? (சுதேசியத்தை மறப்பதும் அவ்வாறே)

தூறுக்கு நீர் வார்ப்பதா?

தான் பிறந்த நாடு அடிமைக் குழியில் வீழ்ந்து இடருறும் வேளையில் தன் உரிமை குறித்துப் பாடு

படும் ஒருவனது செயல், செடியின் மீது ஞாயி ஞெளி படராதவாறு மூடியுள்ள தூறுக்கு நீர் வார்த்தவன் செயல் போன்றதாகும்.

சிறந்த கடவுள் தொண்டு?

நாட்டுக்கு உழைப்பது மனித வாழ்வின் ஒரு பகுதி என்று கூற என் மனம் எழவில்லை; பெரும் பகுதி—முழுப்பகுதி—என்று கூறவே என் மனம் எழுகிறது. தன் நலம் நாடாது தூய உளங் கொண்டு நாட்டுக்குத் தொண்டு செய்வதிலும் சிறந்த கடவுள் தொண்டு பிறிதொன்றில்லை.

பல பூக்கள்; ஒரே மணம்!

நாட்டில் எத்துணைப் பூக்கள் மலர்கின்றன? பன்மையில் ஒருமை காண்டலன்றோ அறிவு டைமை?

அறக்கடவுள் ஆட்சிக்கு...

புறக்கோலத்தில் மட்டுஞ் சுதேசியங் காட்டு வதால் பயனில்லை. அகத்தில் சுதேசிய அறக்கட வுள் கோயில் கொள்ளுமாறு உழைத்தல் வேண் டும். அதற்கு முதலாவது நாட்டு மக்களிடத்தில் ஒருமைப்பட்ட உளங்கொண்டு அன்பு பூண்டொ ழுகும் பெருந்தகைமை வேண்டற்பாலது.

சிறந்த ஒழுக்க முறை

மனிதன் தன் வாழ்வில் தன்னுரிமை குறித்து உழைப்பது போலத் தன்னைச் சூழ்ந்துள்ள நாட்ட வர் உரிமை குறித்தும் உழைத்தல் வேண்டும்— இது மனிதன் தன் வாழ்வில் கொள்ளத்தக்க ஒழுக்க முறைகளுள் ஒன்று; சிறந்த ஒன்று என் றுங் கூறலாம்.

உரிமை இல்லா வாழ்வா!

உரிமை வேட்கை இல்லாத அரசு இடத்தில் உயிர்களிடத்தன்பு நிகழல் அரிது. உரிமைக்கும் அன்புக்கும் பெருந்தொடர்புண்டு. உரிமையில்லா வாழ்வு வாழ்வாகாது. வாழ்விற்கு அழகளிப்பது உரிமை, உரிமையே.

தன்னரசின் தனிப்பெருமை

உலக சகோதர நேயம் என்பது குறிக்கோள் அதற்குத் தன்னரசு இன்றியமையாதது. தன்னரசில்லா நாடு தன்னைக் கெடுத்துக் கொள்வதுடன் பிறரையுங் கெடச் செய்கிறது. அதனால் சகோதர நேயத்தை வளர்த்தல் இயலாது.

உலக நேயம் ஓங்குக...

உலகில் சில நாடுகள் உரிமை யிழந்து கிடக்கும் வரை உலக சகோதர நேயத்துக்கு இடனில்லை என்பது பெரிதுங் கருதற்பாலது.

தன்னரசைத் தகர்ப்பது...?

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் ஒரு நாடு தன்னரசை இழத்தல் இயல்பு.

அறமுறையில் அரசு

தன்னரசு பெறுதற்கு இதுகாறும் உலகில் கொள்ளப்பட்ட முறையை இனி எவருங் கொள்ளுதலாகாது. எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யா அருண் முறையே இனிக் கொள்ளப் பெறல் வேண்டும், நெப்போலியனும், கெய்சருங் கொண்ட கொலை

முறை இனி வேண்டா, காந்தியடிகள் அறிவுறுத்தும் அறமுறையே இனி வேண்டும்.

மாணவர் இல்லா அரசியலா?

'மாணுக்கர் அரசியலில் தலைப்படுதலாகாது' என்று சில இடங்களிற் சொல்லப்படுகிறது. அதற்கு மாணுக்கர் செவி சாய்க்கலாகாது. அரசியற் போராட்டத்தில்—அதிலும் உரிமை இழந்த நாட்டிலெழும் அப்போராட்டத்தில்—மாணுக்கரே பெரிதுந் தலைப்படுதல் வேண்டுமென்பது எனது கருத்து. உலக சரித்திரமும் அவ்வாறே கூறுகிறது.

விடுதலைக்கு வித்துக்கள் யார்?

இதாலி, ஜப்பான், துருக்கி, சீனம் முதலிய நாடுகளின் விழிப்புக்கும் விடுதலைக்கும் காரணராக நின்றவர் யார்? மாணுக்கரல்லரோ? கடந்த ஐரோப்பாப் போரில் தத்தம் தாய் நாட்டுக்காக உயிர் துறந்தவர் யாவர்? மாணுக்கரல்லவோ?

அரசியல் ஏன்?

அமைதி காத்து அறநெறி ஓம்புதற்கென்று அரசியல் நெறி காணப்பட்டது. அரசு என்பது உலகிலுள்ள மக்கள் நன்னெறி பற்றி யொழுகி ஆண்டவன் அருள் பெறுதற்குரிய சாந்த நிலை பெற உறுதுணையாகும்.

இக்கால அரசியல்

இக்கால அரசியல் துறைகள் பொருமையையும் அவாவையும் அடிப்படையாகக் கொண்டு நிலவுவன என்பதை விளக்கலும் வேண்டுமோ?

அரசியலின் தோற்றமும் தோல்வியும்

மக்களை விலங்காக்கும் அரசியலால் என்ன பயன்? மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தி, அவர்கள் அறநிலை பெறுதற்குத் துணை புரியவே அரசியல் முதல் முதல் ஏற்பட்டது. பின்னை, அது மக்கள் அறநிலையைத் தேய்க்குங் கருவியாய் விட்டது.

ஆட்சியிலே சன்மார்க்கம்

சன்மார்க்க ஆட்சி தேவை என்று பிளேட்டோ உள்ளிட்ட சான்றோர் கனவு கண்டனர். அக்கனவு இன்று நினைவாகிறது. நினைவு செயலாற்றுவதற்குச் சன்மார்க்க முயற்சி வேண்டும். முயற்சி வழியே ஆண்டவன் அருள் இறங்கும்.

அசோகனின் ஆட்சி

மக்கள் வாழ்க்கையில் சீலஞ் சிறக்கத்தக்க அரசுகள் துணை செய்தல் வேண்டும். முன்னாளில் அத்தகை அரசுகள் இருந்தன. ஆசோகன் ஆட்சி ஓர் எடுத்துக்காட்டாக நிற்கிறது.

செய்கை அரசால் தீமை

இயற்கையை விடுத்துச் செயற்கையில் செல்லும் அரசுகளால் சமயத்தின் சொரூபமே குன்றியது. சமயத்தின் பெயரால் பல அட்டூழியங்கள் செறிந்தன. அச் செறிவு பொருட் பொதுமையரையும் வேறு சிலரையும் சமயத்தை வெறுத்து மறக்கச் செய்தது. பொருட் பொதுமையால் அட்டூழியம் அகன்றதும் சமய சொரூபம் தானே மிளிர்வதாகும்.

சன்மார்க்கரே ஆள்க!

உலகம், பொதுமை இன்பத்தை நுகர வேண்டுமானுல் அது சன்மார்க்கத்தில் நின்ருெழுகுவதற்குரிய ஆட்சி முறைகள் அமைதல் வேண்டும். இது பற்றியே ஆட்சி முறைகளைச் சன்மார்க்கரிடம் ஒப்புவித்து ஒதுங்குமாறு ஆணவ அரசியலாரைக் கேட்கிறேன்.

சமதர்ம ஆட்சிக் காலம்

காலப்போக்கு மாறிவிட்டது. சாம்ராஜ்யங்கள் எல்லாம் சமதர்ம ராஜ்யங்கள் ஆகும் காலம் இது.

பாரத ஒருமையின் முச்சின்னங்கள்

பாரத நாட்டையே உளங் கொண்டவை மூன்று. அம்மூன்றும் பழம் பாரதத்தின் ஒருமைப் பாட்டையும் உணர்த்துவனவாம். அவை கயிலை, காசி, இராமேசம்.

உடலும் நாடும்

ஒருவன் தன் உடலுக்கு ஊறு நிகழாதவாறு அதைக் காப்பது போலவே, அன்னுன் தான் பிறந்த நாட்டுக்கும் ஊறு நிகழாதவாறு அதைக் காத்தல் வேண்டும்.

* * *

ஒருவனது உடலுக்கும் அவனது நாட்டுக்கும் வேற்றுமையில்லை. உடலினும் நாட்டைப் போற்றல் வேண்டுமென்றுங் கூறுவேன்.

அகத் தூய்மை நாட்டுத் தூய்மை

ஒருவன் எவ்வாறு தனது அகத்தைப் பொய், பொருமை முதலியவற்றிற்கு அடிமைப் படுத்

தாது வாழ விரும்புகிருனே அவ்வாறே ஒரு நாட்டில் வாழும் மக்களும் தங்கள் பொது வாழ்வில் பொய்மை, பொருமை முதலியவற்றைப் புகுத்தி நாட்டை அடிமைப் படுத்தாது காக்க விரும்புதல் வேண்டும்.

அடிமை இருள் அண்டுமோ ?

ஒவ்வொருவரும் தூயராய் வாழ்ந்தால் அவர் வாழும் நாடு அடிமை இருளில் வீழ்வதாகாது.

சரித்திரத்தின் சாதனே?

சரித்திரம் வீணுக்கு ஏற்பட்டதன்று. அது பாடத்துக்கும் பட்டத்துக்கும் மட்டும் ஏற்பட்டதன்று. முற்கால தற்கால நலந்தீங்குகளே உணர்ந்து, தீங்கைக் களேந்து, நலத்தைக் கொண்டு, ஒழுங்குபட்ட வாழ்வு நடாத்த வழி கோலிக் கொள்ளுதற்குச் சரித்திர உலகம் ஏற்பட்டது. சரித்திரக் கண்கொண்டு எதையும் ஆராய வேண்டுவது நம் பெருங்கடமை.

சமதர்மப் பூங்கா

திருட்டு வாழ்வு!

செல்வர் வாழ்வு திருட்டு வாழ்வென்பதில் என்ன ஐயம்? எத்துணையோ பேர் உடுத்த வேண்டிய உடை, உண்ண வேண்டிய உணவு, பயன் படுத்த வேண்டிய பொருள் எல்லாம் ஒரு செல்வன் வாழ்வுக்குத் தேவையாகின்றன! இயற்கை வாழ்வுக்கு மேற்பட்ட ஒரு பொருளை ஒருவன் பெறுவதும், காப்பதும், பயன்படுத்துவதுங் களவல்லவோ? ஆதலால், மனிதன் தன் வாழ்விற்கு மேற்பட்டுப் பொருளீட்டி வாழ்வனேல் அவன்றன் வாழ்வு திருட்டு வாழ்வாக முடியும்.

மறம்

மனிதன் மிகுந்த பொருளை உறங்க வைப்பதும், வட்டிக்கு விடுவதும், தீய வழிகளில் செலவழிப்பதும் மறம்.

இயற்கை வாழ்வா?

ஒருவன் தன் வாழ்விற்குரிய அளவிற்கு மேல் பொருள் பெற்று, அப்பொருளைத் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்க்குமே பெருமிதமாகப் பயன்படுத்துவது இயற்கை வாழ்வாகாது. இச் செயலால் வேறு சிலர் பட்டினி கிடந்து வருந்தல் நேர்கிறது.

சமதர்மம் என்னும் சொல்

சமதர்மம் என்னும் சொல்லிலேயே பொதுமைப் பொருள் மணம் கமழ்தல் காண்க.

சமதர்மம் கனி தர....

சமதர்மம் இப்பொழுது முளை விட்டுள்ளது. அது நன்முறையில் வளர்ந்து மரமாகிக் கனிதரல் வேண்டும் என்று, தவங் கிடப்பவருள் யானும் ஒருவன். அத்தர்மம் செழுமையாக வளர்தற்குத் தக்க ஒளி வேண்டும். அவ்வொளியே 'சத்'—என்னும் செம்பொருள். சத்+மார்க்கம்—சன்மார்க்கம்; சத்—உண்மை.

பொருள் பொதுமை

பொது உள்ளம் — பொது நோக்கு — பொது வாழ்க்கை—பெற வேண்டுமானுல், அதற்குப் பொருளும் பொதுமையாகவே பயன்படுதல் வேண்டும். இல்லையேல், உலக வாழ்க்கை செம்மையாக நடைபெருது. உலகச் செம்மைக்குப் பொருட் பொதுமை தேவையாகிறது. அப்பொழுதே எல்லார்க்கும் பொதுவில் நடமிடும் சிவத்தை உணரத் தக்க உள்ளமும் நோக்கும் சீலமும் உண்டாகும்.

சமதர்மம் எதற்கு?

சமதர்மம் எற்றுக்கு? எல்லார்க்கும் பொதுவில் நடமிடும் செம்பொருளை உணர்தற்கு என்று அறுதியிட்டுக் கூறலாம். அவ்வுணர்வுக்குப் பயன் படாத சமதர்மம் உலகாயதமாகும். இது பற்றியே யான் சமதர்மத்தைச் சன்மார்க்கம் உற்ற சமதர்மம் என்றும், சன்மார்க்கம் அற்ற சமதர்மம் என்றும் சொல்வது வழக்கம்.

சன்மார்க்கம் இல்லாச் சமதர்மமா?

சன்மார்க்கம் அற்ற சமதர்மம் ஓரளவில் புற அமைதியைக் காப்பதாகும். வாழ்க்கைக்குப் புற

அமைதி மட்டும் போதாது. அதற்கு அக அமைதியும் வேண்டும். அக அமைதிக்குச் சன்மார்க்கம் உற்ற சமதர்மம் தேவை.

பொதுமை உள்ளத்தில்...

பொதுமை உள்ளத்தில் பொலியும் அன்புக்கும் சாந்தத்துக்கும் முன்னே நஞ்சேது? மூர்க்கமேது? பகைமை ஏது? நஞ்சு, மூர்க்கம், பகைமை முதலியன புறத்தில் இருப்பனவல்ல; அகத்தில் இருப்பன. அகம் பொதுமையானுல், நஞ்சு, மூர்க்கம், பகைமை முதலிய தீமைகள் உருவெளியாகும். (சூனியமாகும்)

இன்று—நேற்றல்ல

சமதர்மம் இன்று தோன்றியதன்று; நேற்றுத் தோன்றியதன்று; அது நீண்ட காலமாக உலகில் நிலவி வருவது.

கார்ல் மார்க்ஸ் செய்த பணி

ஆங்காங்கே துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த சமதர்மக் கூறுகளையெல்லாம் ஒருங்கு திரட்டி, ஒன்றுபடுத்தி, அவைகட்கு விஞ்ஞான முறையில் ஓர் உருவங்கொடுத்தார் காரல் மார்க்ஸ். அதனுல் அவர் உலக வாழ்த்துக்கு உரியவரானுர்.

சன்மார்க்க சமதர்மம்

மார்க்ஸியத்தைச் சத்துடன் கலப்புறச் செய்தல் வேண்டும். அப்பொழுதே மார்க்ஸியம் சன்மார்க்கமுற்ற சமதர்மம் ஆகும்.

பொதுமையாக்கும் அரசியல்

தன் பொருள் பொதுமை—இறைவனுடையது—என்னும் எண்ணம் மன்பதையில் அற்றுப்போகும் நிலைமை நேருமாயின், அப்பொழுது அறவோர் ஓர் அமைப்பை உண்டாக்கி, அதன் வழிப் பொருளைப் பொதுமையாக்கும் அரசியலை வகுத்தல் வேண்டும்.

வறுமைக்கு வழி

உலகில் சிலரது அளவிற்கு மேற்பட்ட செலவு பலரை வறுமையில் வீழ்த்துகிறது. இம் முறையே உலகில் வறுமை நிலவுவதற்குக் காரணம்.

பள்ளமும் மேடும் இல்லாதொழிக!

அவரவர் முயன்று பெறும் பொருள் அளவில் அவரவர் வாழ்வு நடாத்தினால் உலகில் செல்வ வாழ்வும் இல்லாதொழியும்; வறிய வாழ்வும் இல்லா தொழியும்.

கரையான் புற்றில் கருநாகமா?

செல்வன் தனக்குரிய அளவிற்குமேல் வாழ்ந்து களிக்க விரும்புகிறான். அதனால், அவன் பலர் முயற்சியைத் தன்னலத்துக்குப் பயன்படுத்துவோன் ஆகிறான். அவன் வாழ்வு எங்ஙனம் இயற்கை வாழ்வினதாகும்!

இந்து சமய சமதர்மம்

பாரத நாட்டுப் பழைய தர்ம சாத்திரங்களை ஆய்ந்தால், அவைகளில் கிராமம் கிராமத்தாருடையதென்பதையும், கேணியும், குளமும், ஏரியும், ஆறும், காடும், மலையும் பிறவும் மக்கட்குப் பொதுவுடைமையாய்ப் பயன்பட்டன என்பதையும் அத

ளுல் மக்கள் உழைப்புக்களெல்லாம் சகோதர நேயக் கட்டினின்றும் பிறந்தன என்பதையும் இன்ன பிறவற்றையுங் காணலாம்.

கிறிஸ்துவின் சமதர்மம்

கிறிஸ்து பெருமான், "நாளைக்கென்று கவலை யுருதேயுங்கள்" என்றும், "அன்றுட உணவை அன்றுடம் எங்களுக்குத் தாரும்" என்றும் அருளி யது சமதர்ம நோக்குடையதன்றே?

இஸ்லாத்தின் சமதர்மம்

இஸ்லாம் விதித்துள்ள 'ஜெக்காத்'—வரியின் உள்ளக் கிடக்கை என்னை? உன்னுக.

கல்விக் கண்

உடலுக்கு உணவு; அறிவிற்குக் கல்வி

மக்கள் உடலுக்கு உணவு எத்தகைத்தோ அத்தகைத்து மக்கள் அறிவிற்குக் கல்வி.

கல்வியின் செயல்

மனிதன் அறியாமையைக் கல்லி, அறிவை விளக்கி, அவனது வாழ்வை நேர்மையில் செலுத்த வல்லது கல்வி.

உண்மைக் கல்வி எங்கே?

உண்மைக் கல்வி இயற்கையில் நிலவுகிறது. அதன் ஓவியமே ஏடும் எழுத்தும் என்க.

பரந்த உலகமே பல்கலைக் கழகம்!

காடும் மலையும் ஆறும் கடலும் நடப்பனவும் பறப்பனவும் ஊர்வனவும் நிற்பனவும் ஆண்மக்களும் பெண்மக்களுமாக விரிந்து பரந்து விளங்கும் இவ்வுலகம் எத்துணைப் பெருங்கழகம்.

கல்வி நெறி எது?

ஏட்டுப் படிப்பு மட்டும் கல்வியாகாது என்பது ஈண்டு கருதற்பாற்று. ஏட்டின் எழுத்துமீது கருத்துச் செலுத்தாது, பொருள்மீது கருத்துச்செலுத்தி அப்பொருளை வாழ்வில் இரண்டறப் படியச் செய்து அதன் வழி நடப்பதே கல்வி நெறியாகும்.

இசைப்பொறி மனிதர்

சிலர் இடையீடின்றி நூல்களைப் பயின்ற வண்ணம் இருப்பர். ஆனால் அவரது நூற்புலமைக்கும் வாழ்வுக்கும் எவ்விதத் தொடர்பும் நேர்வதில்லை. இவரை இசைப் பொறிக்கு ஒப்பிடலாம்.

நெட்டுருச் செய்வது கல்வியா?

கல்வி என்பது மனிதன் வாழ்வில் ஊடுருவிப் பாய்ந்து அவனது வாழ்க்கைக்கு உறுதுணை செய்வது. வெறும் எழுத்துக்களை நெட்டுருச் செய்வது கல்வியாகாது.

இன்றியமையாதன

அறிவு விளக்கத்துக்கு இயற்கைக் கல்வியும், உடல் வளத்துக்குச் சிலம்பப் பயிற்சியும், வாழ்வு நலத்துக்குத் தொழிற்புலமையும் இன்றியமையாதன.

கறைகள் நீக்கும் கல்வி

கல்வி அறிவால் நாட்டில் உள்ள பலதிறக் குறைபாடுகள் ஒழியும். குறைபாடுகட்குக் காரணம் போதிய கல்வி அறிவின்மையன்றி வேறென்னை?

தொழிற் பயிற்சியும் கல்வியே!

ஏடெடுத்துப் படித்தால் மட்டுங் கல்வியாகாது. தொழிற்பயிற்சியும் கல்வியின்பாற் பட்டதே!

'இளமையில் கல்'

இளமை கல்விக்குரியது. இளமையைக் கல்விக்குப் பயன்படுத்தலே பொருத்தம். அதனைப் பிறவற்றிற்குப் பயன்படுத்தல் பொருத்தமன்று.

பல துறையிலும் புலமை

அறிவு விளக்கத்துக்கும் ஒழுக்கத்துக்கும் இன்ன பிறவற்றிற்கும் பொதுவாயுள்ள கல்வி யுடன் பின்னை வாழ்விற்கென வேறு பல கல்வித் துறைகளுள் தத்தம் இயல்புக்கியைந்த ஏதானும் ஒன்றைக் கணித்துக் கொண்டு அதில் சிறந்த புலமை பெற இளைஞர் முயல்வாராக!

வாழ்வைத் தொடாத கல்வி

இந்நாளில் கல்வி என்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல் விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லா தொழிகிறது. இது கல்வியாகுமா?

பட்டம் பதவிக்கா?

கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பு மட்டு மன்று. பட்டம் பதவிகளைக் குறிக்கொண்டு படித் தலும் கல்வியாகாது. கல்வி என்பது அறியா மையை நீக்கி அறிவை விளங்கச் செய்வது. தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின்பாற் பட்டனவே.

வாழ்வோடு ஒன்றிய கல்வி

கல்வி என்பது அறிவினூடே ஒன்றி வாழ்வில் கலப்பதாயிருத்தல் வேண்டும்.

உண்மைக் கல்வியாளன் யார்?

பன்னூல் பயின்ற ஒருவன் ஒழுக்கமில்லாதவ னுயின், அவன் கல்வியாளனுகான். நூலே பயி

லாது ஒருவன் ஒழுக்கமுடையவன் ஆயின் அவன் கல்வியாளனாகிறான்.

அறிவுக் கலையின் அவசியம்

உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'ஸைன்ஸ்' என்னும் அறிவுக் கலை.

உடற்கூறு, உடலோம்புமுறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி பறவை விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வாழ்விற்கு வேண்டுமா? வேண்டாவா? இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். இவ்வறிவுக் குறைவால் நாடு மிக இழிந்த நிலையுற்றிருக்கிறது.

கொழுகொம்பு

புற உலக ஆராய்ச்சிக்கு 'ஸைன்ஸ்' கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் 'ஸைன்ஸ்' அரண் இன்றி இந்நாளில் உறுதி பெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்ளுதற்கும், 'ஸைன்ஸ்' தேவை. ஆதலின் 'ஸைன்ஸ்' என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

கடவுளின் கோயில்

மனிதன் உடல் கடவுளின் இயற்கைக்கோயில் என்று உலகில் தோன்றிய பேரறிஞர் பலருங்கூறியுள்ளனர்......அறிவு விளக்கத்துக்கு உறுகருவியாயுள்ள உடலை வெறுப்பது அறியாமை.

கொடிய பாவம்!

எல்லாப் பாவங்களினுங் கொடியது தற்கொலை. ஞானிகள் தற்கொலைக்குத் துணைபோக மாட்டார்கள்.

இசை, ஓவியக் கலைகள்

இசையில் இறைவன்

இறைவன் இசை மயமாயிருக்கிறான். இயற்கை இசை மயமாயிருக்கிறது. நாமும் இசை மயமாயிருத்தல் வேண்டும்.

இசை இன்பம்

இசையிலா வாழ்வில் இன்பமில்லை. அது வசை யுடையதாகும்.

அரக்கன் யார்?

ஒருவன் இசைப் புலவனாயிருத்தல் வேண்டும். அல்லது இசையை மடுத்து இன்புறுவோனாயிருத்தல் வேண்டும். இரண்டுமிலா ஒருவன் கொலை யஞ்சா அரக்கனாவன்.

தமிழர் இசை

தமிழர் இசையுலகின் எல்லையைக் கண்டவர் என்று கூறல் மிகையாகாது. தமிழர் கண்ட யாழும், குழலும், பண்ணளவும் இசையுலகின் எல்லையை அளந்து காட்டுவன என்று அறிஞர் கூறுப.

ஆப்ரகாம் பண்டிதர் இசைப்புலமை

தமிழ் இசை வரலாற்றை நன்கு ஆய்ந்து, காலஞ் சென்ற ஆப்பிரகாம் பண்டிதர் என்பார்

'கருணாமிர்த சாகரம்' என்னும் ஓர் அரிய நூல் இயற்றினர். அந்நூல் இசை ஆராய்ச்சியில் இறங்குவோருக்குப் பெருந் துணை செய்யும் என்பது எனது கருத்து!

கடலா? ஓடையா?

இப்பொழுது மாணாக்கர் பலர் இசை பயில்கிறார்கள். அவர் இசை ஆழியில் மூழ்கியெழுவதில்லை. அவர் சிற்றோடையில்—அதுவும் பாசி படர்ந்த சிற்றோடையில் படிந்தெழுகிறார். இதனால் இசையுலகம் வளர்ச்சி யுறாது.

ஆர்மோனியம் வேண்டாம்

'ஆர்மோனியம்' முதலிய சிறுமைக் கருவிகள் இசையுலகைக் கறைப்படுத்துகின்றன. அக்கருவிகளில் மாணாக்கர் கருத்துச் செலுத்தாதிருப்பாராக.

இயற்கையின் ஓவிய எழில்

இயற்கை அழகை ஓவியத்தில் அமைத்து, அமைத்து அவ்வழகுடன் இரண்டறக் கலந்து, அழகாகிய மக்கள் நந்தமிழ் மக்கள்.

அழகில் தவழும் ஓவியம்

அழகைச் சொல்லும்பொழுதெல்லாம் தமிழர் ஓவியத்தைக் குறிப்பிடத் தவறமாட்டார்.

ஓவியம் இல்லா உளத்தில் அன்பா?

ஓவிய நுட்பம் முகிழாத உள்ளத்தில் அன்பேது? அருளேது?

உலகில் தமிழர் ஒளி வீச...

தமிழ் மக்கள் ஒரு பெரும் நாட்டினராக உலகா முன்னர் ஒளி பெய்ய வேண்டுமேல், அன்னூர் ஓவி யத்துறையை உயிர்ப்பிக்க உறுதி கொண்டே தீர்தல் வேண்டும்.

இயற்கை—வாழ்வுக்குப் பாலம்

மக்கள் இயற்கையுடன் கலந்து வாழ்வதற்கு வேண்டப்படும் கல்வித் துறைகளுள் ஓவியமும் ஒன்று. வாழ்வை இயற்கையுடன் ஒன்றுபடுத்து தற்கு ஓவியம் பாலம் போலத் துணை செய்யும்.

காவிய—ஓவியம் கனிந்த நாடு

இயற்கையைக் காவியங்களாக எழுதிய நம் முன்னோர் அதை ஓவியங்களாகவும் வரைந்தனர். ஓவியத்தில் உளம் பதித்த ஒரு நாடு நமது நாடு.

பழங்கோவில்களில் எழில் ஓவியம்

நமது நாட்டுப் பழைய கோயில்கள் யாவும் ஓவியக் கூடங்களாகவே பொலிகின்றன. அவற் றின் மதிலெலாம் ஓவியம்; தூணெலாம் ஓவியம்; கோபுரமெலாம் ஓவியம்; கோயில் முழுவதும் ஓவி யம்; ஓவியம். இவ்வளவில் நம் ஓவியம் நின்று விட்டதோ? கடவுளிலும் ஓவியம் உருக் கொண்டது.

மாணுக்கர் மாட்சி

மணிவிளக்கு!

தேசபக்தி என்னும் மணிவிளக்கு ஒளிவிட்டெரியுமிடம் மாணுக்கருள்ளமேயாகும்.

தாய்க் கொலே?

எளிதில் கிடைக்கக் கூடிய நாட்டுப் பொருள்களே விடுத்து அவைகட்குப் பதிலாகப் பிறநாட்டுப் பொருள்களேப் பயன்படுத்துவது தாய்க் கொலேயாகும்.

நாட்டுக்கு நற்ருெண்டு

நாட்டுடை, நாட்டுக்கலே, நாட்டுத் தொழில் முதலியவற்றை ஓம்ப மாணுக்கர் முனேந்து தொண்டாற்றுவாராக!

இளேஞர்களே எழுங்கள்!

இளேஞர்களே! வருங்கால உலகம் உங்களே நோக்கி நிற்கிறது. உங்கள் தாய்நாடு உங்களே நோக்கி நிற்கிறது; உங்கள் தமிழ்த்தாய் உங்களே நோக்கி நிற்கிருள்; உலகில் சகோதர நேயம் பெருகல் வேண்டும். நாடு தன்னரசின்பம் நுகரல் வேண்டும்; தமிழ்த்தாய் அரியாசனம் ஏறல்வேண்டும். இத்துணைக் கடன்கள் உங்களேச் சூழ்ந்து நிற்கின்றன. அக் கடன்களாற்ற எழுங்கள்; எழுங்கள்.

மாண்புள்ள மாணுக்கர் இயக்கம்

இது போழ்து உலகில் தோன்றியுள்ள இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தன சில. அச்சிலவற்றுள் ஒன்று மாணுக்கர் இயக்கம் என்பது.

நிகழ்காலத்தில் வருங்காலம்

நிகழ்கால உலகைக் கொண்டு வருங்கால உலகைப் படைக்கும் பொறுப்பு மாணுக்கர்பால் உளது. அப்படைப்பில் நிகழ்கால உலகிலுள்ள குறைபாடுகள் பல களையப்படுதற்கு இடனுண்டாகும்.

ஆன்மநேயத்தின் விளைநிலம்

மாணுக்கருடைய இளைய நெஞ்சில்—மாசிலா நெஞ்சில்—பெரிதும் வேற்றுமையுணர்வு தோன்றுவதில்லை. அந்நெஞ்சில் வேற்றுமை கடந்த ஆன்மநேயம் எளிதில் வளர்தல் கூடும். அந்நிலம் பண்படுவதற்கு ஏது உண்டு.

இயற்கையின் திருவருள்

தற்போதைய மாணுக்கர் உலகில் புறவேற்றுமையுணர்வு ஓரளவு அருகியும், உலக சகோதர நேயம் அவ்வளவில் ஒருவாறு பெருகியும் வருதல் கண்கூடு. இஃது இயற்கை அன்னையின் திருவருள்.

வையத்தை மாற்றும் வல்லவர் யார்?

வருங்கால உலகில் ஒரு பெரும் மாறுதல் நிகழப் போதல் உண்மை. அதை இயற்கை அன்னையின்

நோக்கைக் கொண்டும், தற்கால உலக நிலையைக் கொண்டும் அளந்து கூறுதல் கூடும். அம்மாறு தலை அன்பு வழியில் நிகழ்த்தற்குரிய இயக்கம் எது வாயிருக்கலாம்? இப்பொழுதுள்ள இயக்கங்களைப் பார்த்தால் அது மாணுக்கரியக்கமாகவே இருக்க லாமென்று கூறலாம்.

'மாணுக்கர்' என்றால் என்ன?

மாணுக்கர் என்னுஞ் சொல் விழுமிய பொருள் உடையது. பின் வாழ்விற்கு வேண்டப்படும் மாண் பொருளை ஆக்குதற்கு ஒழுக்கநெறி நிற் போர் மாணுக்கராவர்.

மாணுக்கர் முதலில் வேண்டுவது

மாணுக்கர் உலகிற்கு முதல் முதல் வேண்டற் பாலது ஒழுக்கம்.

அழகும் இளமையும்

உடல்வளம் இன்றி வாழ்வா?

இளைஞர்களே! உடலோம்பலுக்குரிய அகவை இதுவே. இவ்வேளையிலேயே உடலோம்பலிற் கருத்தைச் செலுத்துங்கள். உடல்வளம் பெறுவாழ்வு என்ன வாழ்வு?

அழகுக் கடவுள் ஆகுக!

நீங்கள் அழகுக் கொழுந்துகளாகப் பொலிதல் வேண்டும்! உங்களைப் பார்க்கும்போது, அழகுக் கடவுள் நினைவு தோன்றுதல் வேண்டும்; ஆகவே, அழகை எண்ணுங்கள்; அழகை உன்னுங்கள்; அழகாகுங்கள். நாடு முழுவதும் உங்களால் அழகு பெறல் வேண்டுமென்பது எனது பேராவல்.

அழகிலா இளமை

அழகிலா இளமை இளமை ஆகுங்கொல்? மாணாக்கர் ஒவ்வொருவரும் அழகுக் கடவுள் போலல்லவோ உலவுதல் வேண்டும்!

அழகின் ஆலயம் அதுவா?

விழுந்த கண்ணும், வளைந்த முதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையும் உடைய உடலில் அழகுக் கடவுள் எங்ஙனம் கோயில் கொள்ளும்?

அழகு அரும்பும் அழகு

அழகு என்பது நிறத்தில், மயிர் நீவலில் மூக்குக் கண்ணுடியில், கழுத்துச் சுருக்கில், பட்டுடையில், பிற அணிகளில் அமைந்திருப்பதன்று. மூளை, இதயம், நுரையீரல், மண்ணீரல், குண்டிக்காய் முதலிய பேருறுப்புக்கள் செழிய நிலையில் நின்று ஒழுங்குபெறக் கடன் ஆற்றலால் உற்று நரம்புக் கட்டினின்றும்-தடைபடாக் குருதியோட்டத்தினின்றும்—முகிழ்க்குந் தசையிடை அரும்புவது அழகாகும்.

அழகு உடல் அடைக!

நோயணுகா அழகுடல் பெற முயலுங்கள்.

இயற்கைத் தாய் தண்டிப்பாள்!

ஆண்டவன் அளித்த அரிய உடலை நல்வழியில் ஓம்பாதவரை இயற்கையன்னை ஒறுத்தே தீர்வாள்.

அழகின் எதிரி

அழகு அரும்பாது ஒழிதற்கு மூல காரணம் மலச்சிக்கலேயாம்......ஆகவே, மலச்சிக்கல் உருதவாறு உடலை ஓம்புதல் வேண்டும்.

நல்லுடல் பேற்றுக்கு

நல்லுடற்பேற்றிற்கெனப் பெருமுயற்சிசெய்ய வேண்டுவதில்லை. வைகறைத் துயிலெழப் பயிலுதல்வேண்டும்; எழுந்து காலைக் கடன்களை முடித்து வியர்வை சிந்த ஏதாயினும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உலாவும் உடற் பயிற்சி

உடற்பயிற்சிகள் பலதிறத்தன. அவரவர் உடல் நிலைக்கேற்றவண்ணம் அவரவர் ஏதாயினும் ஒன்றைக் கொள்ளலாம். தண்டால், நீச்சு முதலியன சிறப்பாகக் குறிக்கத் தக்கன. எல்லாரும் கொள்ளத் தக்கதும் எளியதுமாயிருப்பது ஒன்று. அஃது உலாவுதல்.

நடையில் உடற்பயிற்சியும், காற்றிடை மூழ்கலும், ஞாயிற்றொளியில் தோய்தலும் நிகழ்ந்து விடுகின்றன.

சிலம்பப் பயிற்சி செழிக்க!

நமது நாட்டுச் சிலம்பப் பயிற்சியை உயிர்ப்பிக்க வேண்டுவது இளைஞர் கடமைகளுள் ஒன்று.

ஆசனங்களின் ஆற்றல்

ஆசனங்களின் கூறுகள் இப்பொழுது நன்கு ஆராயப்பட்டுள்ளன. உடலோம்பலுக்கு அவற்றினுஞ் சிறந்த சாதனங்கள் வேறில்லை என்று கூறல் மிகையாகாது. தோல், நரம்பு, சினையுறுப்பு, முதலுறுப்பு முதலிய எல்லாவற்றிற்கும் உரமூட்டும் ஆற்றல் ஆசனங்கட்குண்டு. ஓரிடத்திருந்து கொண்டே உடற்பயிற்சி செய்யும் முறைகள் நம் முன்னோரால் காணப்பட்டன. அவர்தம் அறிவுத் திறனை என்னென்று புகழ்வது?

சந்தியாவந்தன முறைகள்

யோக நெறிகள், சந்தியாவந்தன முறைகள், சரியை யாதித் தொண்டுகள் முதலிய யாவும் உடலோம்பலைக் குறிக்கொண்டே காணப்பட்டன

என்பது எனது கருத்து. அவை யாவும் ஆண்டவன் நினைவூட்டும் முறையில் கோலப்பட்ட பெருமை நம் ஆன்ருேருடையது. தற்கால பூத, பௌதிக நூற்றுணை கொண்டு அப்பழைய முறைகளை ஆராய்ந்தால் அவற்றின் நுட்பம் புலனுகும்.

வாழ்க்கை முறைமை

நறுநீராடி, கடவுளை நினைந்துருகி, உள்ளத்தை அன்பு மயமாக்கிப் பொருந்திய உணவு கொள்ளல் முறைமை.

உடல் நலனுக்கு உயிர்?

நல்லொழுக்கம் உடலோம்பலுக்கு இன்றியமையாதது. மிதூண் கொள்ளாது பொருந்திய உணவு கொள்ளும் ஒருவன், ஒழுக்கம் காவாதொழிவனேல் பயன் விளையாது. நல்லுணவுடன் நல்லொழுக்கமும் தேவை. நல்லுணவு நல்லொழுக்கத்தின் பொருட்டே கொள்ளப்படுகிறது. ஒழுக்கமே உடல் நலனுக்கு உயிர் போன்றது.

தீய்க்கும் தீய எண்ணங்கள்

பொருமை, சினம் அவா, பிறர்மனைவிழைதல், வரைவின் மகளிர் இன்பந் துய்த்தல்முதலிய தீய ஒழுக்கங்கள் உடல் வளனைக் கெடுத்தல் இயல்பு. கெட்ட எண்ணங்கள் உடலை எரிக்கும் எழுநா என்று சுருங்கச்சொல்கிறேன்.

பருகக் கூடாத பானங்கள்

காப்பி, டீ, கொக்கோ, ஓவல்டையன் முதலிய குடிகளையுந் தொலைத்தல் வேண்டும். குளிர் மிகுந்த

மேனுட்டறிஞரே அவற்றை இப்பொழுது விலக்கி வருகிருர். வெம்மை நாட்டில் வாழும் நமக்கு அக்குடிகள் எற்றுக்கு? நமது நாட்டில் என்புருக்கி (சயரோகம்) முதலிய நோய்களைப் பெருக்கி வருவன அக்குடிகளே யாகும். அப் பானங்கட்குப் பதிலாக நீர்மோர், இளநீர் முதலியன கொள்ளலாம்.

கொல்லும் குடிகள்

கள், சாராயம் முதலியவற்றின் கொடுமையை ஈண்டுக் குறிக்க வேண்டுவதில்லை. இப்பொல்லாக் குடிகளால் மக்களின் ஈரல் முதலிய உறுப்புக்கள் அரிக்கப்படுகின்றன; எரிக்கப்படுகின்றன. இவற்றைக் கனவிலும் மறந்துங் கருதலாகாது.

இன்பம் எங்கே?

இளமை இல்லையேல் உலகில் இன்பம் ஏது? புல்-பூண்டுகளிலும், செடி-கொடிகளிலும், பறவை விலங்குகளிலும், மக்களிலும் இளமை அரும்பிக் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, இன்ப அமிழ்தால் அகவிருந்து நல்கிவருவதை ஏவரே அறியார்?

உலகை ஓம்புவது எது?

உலகை இன்பத்தால் ஓம்பி வருவது இளமை, இளமையே!

வாழ்வின் அடித்தளம்

இளமையே வாழ்வுப் படிகட்கெல்லாம் அடியாயிருப்பது; இளமையே வாழ்வுக்கு அடிகோலுவது;

இளமையே எல்லாவற்றுக்கும் ஊற்று; இளமைக் கால் கொண்டே வாழ்வெனும் நிலையம் எழுகிறது.

ஆக்கத்திற்கு அடிப்படை

ஒருவனது ஆக்கமும் கேடும் அவனது இளமை ஒழுக்கத்தையே பொறுத்து நிற்றலும் ஈண்டுக் கருதத் தக்கது.

ஒற்றுமைக்கு உற்ற இடம்

பகைமை, பொறாமை இல்லா இடத்திலேயே ஒற்றுமைக்கு இடமுண்டு. ஆகவே, இளமை, ஒற்றுமைக்கு உறுகருவியாய் உதவுவது என்க.

நாட்டின் நலிவுக்கு நன்மருந்து

எக்காரணத்தினாலேனும் நாடுகள் சவலை யுறுமேல், அச்சவலை போக்கும் ஆற்றல் அவ்வந் நாட்டு இளஞாயிறுகளுக்கு உண்டு.

வாழ்வு மரத்தின் வேர்

எதையும் இளமையிலேயே பயில்வது நலன்; வாழ்வெனும் மரத்துக்கு இளமைப் பயிற்சி வேர் போன்றது.

இளைஞர் இயக்கத்தால் ஏற்றம்

உலக சரித்திரத்தை நோக்குழி இளைஞர் முயற்சியாலேயே பல நாடுகள் ஆக்கமுற்ற உண்மை செவ்விதிற் புலனாகும். மாசினி முதலிய தேச பக்தர்கள் இளைஞர் இயக்கத்தின் வாயிலாகவே தங்கள் நாட்டுக்கு விடுதலை கண்டது உங்களுக்குத் தெரியும்.

இளைஞரின் முதற் கடமை

நமது நாட்டின் தொன்மை, நாகரிகம், முன்னோர் வரலாறு முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுவது இளைஞரின் முதற்கடமை.

அறிவிற்கு அழகு?

வேறு நாடுகளின் பழைய வரலாறுகளையும் இளைஞர் ஆராய்ந்துணரல் அறிவிற்கு அழகு!

பழையன தரும் புத்துயிர்

சில வேளைகளின் பழையன சில இளைஞர் உலகிற்குப் புத்துயிர் அளித்தலும் உண்டு. சில இடங்களில் பண்டைப் பெருமை உணர்வு, புது புதுச் சக்திகளைக் கிளப்பி நலஞ் செய்தலும் உண்டு.

இளைஞர், உடலோம்பல் மீது பெருங்கவலை செலுத்தல் வேண்டும். இவ்வுலக இன்பத்தை நேரிய வழியில் நுகர்தற்பொருட்டே கடவுளால் அளிக்கப் பெற்ற உடைமை இவ்வுடல்.

கடவுள் தந்த உடைமை

இளமையில் உடலைக் காவாது கவலை ஈனமாகக் கிடத்தல் பின்னை இவ்வுலக வாழ்வை இழந்து துன்புறுதற்குக் கால் கொள்வதாகும்.

எச்செல்வம் பெற்றால் என்ன?

உடல்வளம் பெறாத ஒருவன் எச் செல்வம் பெற்றிருந்தால் என்னை? எப்பேறு பெற்றிருந்தால் என்னை?

அழகுக்கு அறிகுறி

நல்லுடலுக்கு அறிகுறி என்னே? அதன் கண் ஊறும் அழகேயாகும்!

அழகிலா உடல் நோயுடையது என்பதில் என்ன ஐயம்? அவ்வழகுக் கடவுள் கோயில் கொள்ளும் அகவை எது? இளமை என்று சொல்லலும் வேண்டுமோ?

புகையே பகை!

புது நாகரிகத்தால் வேருெரு கொடுமை சிறப்பாக இளைஞரிடைக் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. அஃதென்னே? சுருட்டு, சிகரெட், பீடி முதலியன பிடித்தல். சிறுசிறு குழந்தைகள் வாய்களும் புகை யந்திரங்களாக மாறிவிடுகின்றன. அவர் தமது நுரையீரலும் இதயமும் அப்புகை வெம்மையால் எரிக்கப்படுவதைத் தொடக்கத்தில் உணர்கிருர் இல்லே. நாளடைவில் இளைஞர்கள் அழகிழந்த என்புக் கூடுகள் ஆகின்றனர். உடலுக்குக் கேடு விளேவிக்கத்தக்க வழக்க ஒழுக்கங்களில் இளைஞர்க்கு பற்றும் பிடிவாதமும் உண்டாதல் தவறு. அத்தீப் பயிற்சியுடைய இளைஞர் மெல்ல மெல்ல அதை ஒழிப்பாராக.

எலும்புந் தோலுமாய் இருப்பதேன்?

காப்பி, டீ, சுருட்டு, சிகரெட், புலால், இளமை மணம், களியாடல் முதலியன இக்கால மாணுக்கர் உலகை அரித்தும் எரித்தும் வருதலே ஈண்டு எம் மொழியால் இயம்பவல்லேன்! இம்மாணுக்கர் உடலில் என்புந் தோலும் காட்சி அளிக்கின்றனவேயன்றி அழகுக் கடவுள் காட்சி அளிப்பதில்லே.

ஒழுக்கத்தில் அழகின் ஒளி!

ஒழுக்கமுள்ள இடத்தில் அழகு ஒளி செய்யும்.

இளமையில் ஈட்டும் பொருள்

மாணுக்கர் இளமையில் ஈட்டத் தக்க மாண் பொருள் கல்வி. அப்பொருள் கற்பகம் போன்றது.

மருந்தே உடம்பைக் கெடுக்கும்

'உடலோம்பல் மருத்திடை உண்டு'—என்னும் எண்ணமே உடலைக் கெடுக்கும். உடலோம்பலுக் கென மேல்நாட்டுத் தண்ணீரும் வேண்டா; மாத்தி ரையும் வேண்டா; கீழ்நாட்டுப் பஸ்பமும் வேண்டா; இலேகியமும் வேண்டா.

மனக்கோவிலில் மகிழ்ச்சி

கவலையிலா உளத்தினின்றும் பிறக்கும் மகிழ்ச் சியே அமிழ்தாய், உடலைச் செந்நெறியில் ஓம்பி வரும். ஆகவே, கவலையூட்டக்கூடிய எண்ண மோ சொல்லோ செயலோ தம்பால் உருதவாறு தம்மை மாணுக்கர் காத்துவரல் வேண்டும். மகிழ்ச்சி, என்றும் மனத்தில் கோயில் கொள்ளத் தக்க வினைகளை நிகழ்த்த அவர் பழகல்வேண் டும்.

உலவுதல்...உயர்ந்த பயிற்சி

'உடற்பயிற்சி உடற்பயிற்சி என்று சிலர்' உடலைக்கெடுத்துக் கொள்கிருர். முரட்டுப் பயிற் சிகள் முற்றும் விலக்கற்பாலன. கதிரொளி படரக் காற்றில் முறைப்படி உலவுதல் நற்பயிற்சி.

ஆசனங்களின் அவசியம்

நம் முன்னோர் உடற்பயிற்சிக்கென ஆசன முறைகள் கோலினர். அம் முறைகள் மேல் நாட்டு நாகரிகம் நாட்டில் நுழைந்தபொழுது எள்ளி நகையாடப்பட்டன. பின்னை ஆசனங்களின் நுட்பங்கள் ஆராயப்பட்டன. அவை ஒவ்வொரு முதலுறுப்புக்கும் சினை உறுப்புக்கும் உரமூட்டுதல் காணப்பட்டது. இப்பொழுது மேல் நாட்டறிஞரும் அவற்றைப் பயின்று வருகிறார். வட இந்தியாவில் அப் பயிற்சி காட்டுத்தீபோல் பரவி வருகிறது. ஆசனங்கள் எல்லாவற்றினும் மாணுக்கர் பயிற்சி பெறவேண்டுவதில்லை. இரண்டொன்றில் மட்டும் பயிற்சி பெறுவது சாலும்.

பிராணுயாமமும் போலியோகியும்

பிராணயாமப் பயிற்சியும் நலன் தரும். இப் பயிற்சியைத் தக்கார்மாட்டுப் பயிலுமாறு மாணுக்கரைக் கேட்டுக் கொள்கிறேன். பிராணுயாமம் என்னும் பெயரால் சில கயவர் போலியோகங்களைச் சிறுவர்க்குச் சொல்லி அவர் வாழ்வைப் பாழ்படுத்துகிருர். மாணுக்கர் அப்போலி யோகிகளின் மாயவலையிற் சிக்குற்று இடர்ப்படாதிருப்பாராக.

மூச்சில் தேர்ந்த முன்னோர்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே நம்மவர் காற்றின் பெற்றியையுணர்ந்து அதை ஈர்த்து விடும் முறையை ஒழுங்குபடக் கோலியது ஈண்டுப் பெரிதுங் கருதற்பாற்று.

நஞ்சு எது? அமிழ்து எது?

தீய எண்ணங்கட்கு எக்காரணம் பற்றியும் இடந்தரலாகாது. எண்ணும் எண்ணம் தூயதா

யிருத்தல்வேண்டும். தீய எண்ணம் நஞ்சினுங் கொடியது. நல்லெண்ணம் அமிழ்தென உடலை ஓம்பும்.

பயணம் பலம் தரும்

மாணுக்கர் ஓய்ந்த வேளைகளில் தரை வழியாக வோ, கடல் வழியாலோ சென்று பல பதிகளைப் பார்த்தல்வேண்டும். பல மக்களோடு பழகல் வேண்டும்; உலக இயல்களை நன்கு தெளிதல் வேண்டும். இச் செலவால் அவர் இயற்கைக் கல் வியறிவும் பெறுதல் கூடும். மாணுக்கர் வாழ் விற்கு இச்செலவு மிக இன்றியமையாதது.

உணவு முறைகள் சில

உணவு முறைகள் பெரிதுங் கவனிக்கற் பாலன.

முதலாவது வேளை—நாழியின்றிச் சாப்பிடு வதை நிறுத்தல் நல்லது. பசித் தோற்றம் இல் லாதபோது எக்காரணம் பற்றியும் உணவு கொள் ளலாகாது.

மீதூண் கொள்வது அறியாமை. நோய்க்கும் அகால மரணத்துக்கும் அடி கோலுவது மீதூண், மீதூணுகும்.

பொருந்தா உணவுங் கூடாது.

சமையல் மட்பாண்டங்களில் செய்வதே பொருத்தம்.

புளி, காரம் போக்குக !

காய்கறிகளில் அளவு கடந்த புளி, காரம் பெய்து சமைப்பது கூடாது. நம் தென்னுட் டார்க்குப் புளி காரப் பித்து என்று விடுமோ அறிகிலேன்.

பொல்லாத புலால் உணவு மனிதனும் விலங்காவான்

புலால் உணவு மனித வாழ்வை விலங்கு வாழ்வாக்குவது. புலையன் உள்ளத்தில் ஒப்புரவு யாண்டிருந்து எழும்?

இரக்கம் எங்கே வரும்?

தன்னைப் போன்ற பிறிதோர் உயிரைக் கொன்று உண்பவன் பிற உயிரிடத்தில் எவ்வாறு இரக்கம் செலுத்த வல்லவனுவன்?

* * *

மனிதன் பிறர்க்கு உழைக்கப் படைக்கப்பட்டான் என்னும் அரிய நோக்கத்தைப் புலால் உண்பவன் எவ்வாறு நிறைவேற்றல் கூடும்?

உயிர்க் கொலை புரிவதா?

புலால் உண்ணல் உயிர்க் கொலையைப் பொறுத்திருத்தலானும், உயிர்க்கொலை அருணெறியை அழிப்பதாகலானும், அது மனித வாழ்வைப் பிறர்க்கு உழைக்கும் நெறியில் பண்படுத்தாது என்பது அருளாளர் உள்ளக்கிடக்கை.

புலால் உண்ணு நெறி எது?

புலால் உண்ணுமை குடியில் பிறந்த காரணத்தானும், தொன்று தொட்ட வழக்கத்தானும் சிலர் புலால் தின்னுது உயிர்க்கொலை மட்டும் நிகழ்த்தி வருகின்றனர். இப்புலால் உண்ணுமை பொருளற்றது. புலால் உண்ணுமை, கொல்லாமையை—ஜீவ

காருண்யத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இதுவே, நம் நாட்டார் கண்ட புலால் உண்ணு நெறி.

*　　　*　　　*

புலால் உணவு மனித வாழ்வைக் குலைப்பதாக லான், அதை மனிதன் கொள்ளலாகாதென்பதை ஈண்டு வலியுறுத்துகிறேன்.

பெண்ணுக்குப் புலால் உணவா?

எக்காரணம் பற்றியும் பெண் மக்கள் புலால் உண்ணக் கூடாது. பெண்மக்கள் அனைவரும் தூய உணவு கொள்வதில் உறுதி கொள்ளல் வேண்டும். அப்பொழுது ஆண் உலகு திருந்தும்.

நோய் செய்யும் புலால்

புலால் உணவு குணத்தையும் கெடுக்கும்; உடல் வளத்தையும் குலைக்கும்...புலால் உணவு உடலுக்கு நலஞ்செய்வதன்று. நலத்துக்குப் பதிலாக அது நோய் செய்யும்.

...நம் முன்னோர் ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக் கிடத்திப் புலால் உணவை மறுத்துக் கூறினர். மேல்நாட்டு அறிஞர் புலால் உணவால் உடல் வளத்துக்கே கேடு உண்டு—என்பதை ஆராய்ச்சியால் நிறுவிக் காட்டி அவ்வுணவை மறுக்கிறார். ஆதலால் உடல் நலன் விரும்புவோர் புலால் உண்ணுதிருப்பாராக.

அமைதியை அழிக்கும் புலால்

இயற்கையாகப் பெண் மக்களுக்கு அமைதிக் குணம் அமைந்திருக்கிறது. அமைதி பெண்ணின்

வாழ்விற்கு உரியது. அதைப் புலால் உணவு சிதைக்கும். மக்களைக் கெடுக்கும் இரஜோகுணத்தை எழுப்பும். புலாலை எக்காரணம் பற்றியும் பெண் மக்கள் உண்ணுதல் கூடாது.

தற்கொலைக்கு வித்து

பெருந்திண்டி (பெருந்தீனி) தின்பது தற்கொலைக்கு வழி தேடுவதாகும்..ஆண்டவன் தந்த உடலைப் பெருந்திண்டி தின்று மாய்ப்பது எத்தகை அறியாமை!

எளிய உணவு எது?

எளிய உணவு என்பதற்கும் பட்டினி கிடக்க வேண்டுமென்பது பொருளன்று. இயற்கை அளவாக (இயற்கை) உணவு கொள்ள வேண்டுமென்பது அதற்குரிய பொருள்.

நூருண்டு வாழ...

இயற்கை அளவாக (இயற்கை) உணவருந்தினுல் நூறு வயது உலகிடை வாழ்ந்து இன்பம் நுகரலாம்.

இல்லற இன்பம்

தெய்வ மணிவிளக்கு

வீட்டை இன்ப ஒளி வீசுமாறு செய்யும் தெய்வ மணிவிளக்கல்லவோ பெண்?

மாண்புள்ள மனைவி

மனைவி வெறுங் கல்விக்கு மட்டும் உரிய ஒருத்தியல்லள்; அவள் தாயுமாவள்; உடன் பிறந்தவளுமாவள்; மகளுமாவள்; கடவுளுமாவள்; எல்லாம் அவள். அவளிடத்து எல்லா இயல்புகளும் உள்ளன. இவையெல்லாஞ் சேர்ந்த ஒருத்தியே மனையில் வாழத் தத்கவள் என்க.

இறைமைப் பேறு

பிள்ளைப் பேற்றின் பின்னை, நாயகன் தந்தையாகிறான். நாயகி தாயாகிறாள். இப்பேற்றினின்றும் இறைமைப் பேறு பெற இருவரும் முயலல் வேண்டும். இதுவே அந்தண நிலை.

இயற்கை அழகுகளின் இருப்பிடம்

பெண் ஓர் இயற்கை வனம் போலக் காணப் படுவள். நீல வானமும், வெண்திங்களும், மாங் குயிலும், நீல மஞ்ஞையும் அழகிய மலரும், விரைக் கொடியும், அருவி கொழிக்கும் மணிகளும் பிறவும் ஒருங்கு திரண்டு பெண்ணெனப் பொலிதல் காண லாம்.

பெண்மையாவது யாது?

பெண்மையாவது யாது? அடக்கம், பொறுமை, தியாகம் பரநலம், இரக்கம், அழகு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும்.

பெண்மை என்னும் பெயர்

மண், நீர், காற்று, ஒளி முதலியன சேர்ந்து மரமாதல் போல, அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன.

சிறுசிறு நீர்த்துளி சேர்ந்து பரந்த நீர்நிலை என்னும் பெயர் பெறுதல் போலவும், சிறுசிறு பரல்கள் சேர்ந்து மலை என்னும் பெயர் பெறுதல் போலவும் அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி அவை பெண்மை என்னும் பெயர் பெற்றன.

பெண் தெய்வம்

பெண்மை என்னும் இன்பத் தெய்வத்தை ஏந்தி நிற்கும் பெண்ணை வெறும் பெண் எனக் கொள்ளாது, பெண் தெய்வம் என்றும் போற்ற லாம்.

பெண்ணும் மின்சாரமும்

மின்சாரம் யாண்டும் இயங்கினும் அது யாண்டும் தானே விளங்கித் தோன்றுவதில்லை. அதனை விளங்கித்தோன்றுமாறு தொழிற்படுத்தும் இடத்தில் மட்டும் அஃது ஒளிரும். அதேபோல, இன்பம் யாண்டும் பரந்து நிற்பினும் அது பெண் மையில் விளங்கி, நிகழ்ச்சியில் உணர்த்தும் என்க.

அழகுக் கடவுள் எங்கே ?

அழகுக் கடவுளைக் கண்டின்புற எவரும் வானத்தை நோக்க வேண்டியதில்லை; மலைக்கேக

வேண்டுவதில்லை காடுகளில் புகவேண்டுவதில்லை; கடலை நாட வேண்டுவதில்லை; காவியங்களைப் புரட்ட வேண்டுவதில்லை; அழகுக் கடவுள் பெண்ணுருவில் காட்சியளிக்கிறது.

கருத்தழியும் காமுகர்

பெண்ணின்பாலுள்ள அழகுக் கடவுளைக் காணாது அவளது என்புதோல்மீது கருத்துக் கொண்டழியுங் காமுகர் நிலை குறித்து இரங்குகிறேன்.

தாய் உள்ளம்: கடவுள் இல்லம்

தாய் உள்ளத்தில் இல்லாத கடவுள் வேறெங்கே இருக்கப் போகிறார்?

தாய்மைக்கு அஞ்சுபவள் பெண்ணா?

இப்பொழுது பெண் மக்கள் பல இடங்களில் ஆண் மக்களைப் போலவே கல்வி பயில்கிறார்கள்; உயர்கல்வியும் பெறுகிறார்கள். இக்கல்வி பெறுவோருள் சிலர் தாய்மை நிலைபெறுவதற்கஞ்சி வாளா காலங் கழிக்கின்றனர். இவரைக் கற்றவரென்று யான் கூறேன். பெண் வாழ்வின் நோக்கம் என்னை? தாய்மை நிலை பெறுதலன்றோ?

பெண் ஒரு பல்கலைக் கழகம்

இல்வாழ்க்கை நடாத்தவும் பிள்ளைகளைத் தக்க வழியில் வளர்க்கவும், சமயம் நேர்ந்துழி வேறு பல துறைகளில் இயங்கிக் கடனாற்றவும் பெண் மக்கள் பலதிறக் கலைஞானம் பெறுதல் இன்றியமையாமை. எல்லாப் பெண் மக்கட்கும் பதார்த்த குணம், வைத்தியம், கணிதம், அரசியல் முதலிய கலைகளில் பொது அறிவு இருத்தல் வேண்டும். பெண் எனில் அவள் ஒரு பல்கலைக் கழகமாயிருத்தல் வேண்டும்.

பெண்ணின் பெருமை எங்கே?

பெண்ணிற்குள்ள பெருமை யாண்டுளது? ‘கற்பில்’ என்று எவருங் கூறுவர்...

பெண்ணிற்குள்ள பெருமையெல்லாம் கற்பில் அடங்கியிருத்தல் ஊன்றிக் கருதற்பாலது. கற்புடையவளே பெண்; அஃதில்லாதவள் பெண் அல்லள்.

பெண்ணின் பெருங்குணங்கள்

குடும்பக் கொடுமைகளைப் பொறுத்தல், உள்ளத்தை மற்றவர்கட்கு ஈந்து மகிழ்தல், தனக்கென வாழாது பின்னுலகாக்கும் உயிர்கட்கென வாழ்தல், விருந்தோம்பல், ஏழைகட்குதவல் முதலிய அருங் குணங்கள் பெண்ணினிடத்துப் பொலிதல் வெள்ளிடைமலை.

ஆண்வடிவில் பெண்மை

ஆண் வடிவில் பெண்மைக் குணம் பெற்ற மக்களே இதுகாறும் உலகில் அன்பர்களென்றும் அடியார்களென்றும், அறிஞர்களென்றும், வீரர்களென்றும், பாவலர்களென்றும் சொல்லப்பட்டு வருகிறார்கள்.

* * * *

‘அகமே புறம்’—என்றபடி குணத்துக்கேற்ற முகம் மலரும்.

பண்டைக்கால அன்பர், அருளாளர் முதலியோர் படங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைக்குமேல் அவர்தம் முகத்தில் பெண்மையைப் பார்க்கலாம்.

புத்தர், கிறிஸ்து, திருவள்ளுவர், அப்பர், நம்மாழ்வார் முதலியோர் முகங்களில் பெண்மை பொலிந்திருத்தல் வேண்டும்.

பாட்டில் சிறந்த ஷெல்லி, வீரத்திற் சிறந்த நெப்போலியன், பொறுமையிற் சிறந்த காந்தியடிகள் இவர்கள் திருவுருவப் படங்களை உற்று நோக்குவோம். இவர்கள் முகத்தில் மனத்தைக் கவரும் பெண்மை என்ன அழகாய்ப் பொலிகிறது!

பெண்மைக்கே முதன்மை இடம்

மனத்தைக் கவரும் அழகரும்பி, நல்வாழ்விற்கு அடிகோலும் அடக்கம் மலர்ந்து, பொறுமை, தியாகம், தன்னல மறுப்பு, இரக்கம் முதலிய செவ்விய நீர்மைகட்கு அடிப்படையாயுள்ள அன்பு காய்த்து, பின் உலகுக்கு ஆக்கும் தாய்மைத் தொண்டு கனிந்து, இன்ப வாழ்வெனும் தேன்பிலிற்றும் பெண் கொடியின் முதன்மையையா மறப்பது? மறுப்பது?

நாட்டின் தாய் அடிமையுற்றால்...

பெண் நாட்டின் தாய்; ஆகலான், அவள் அடிமைப்படும் இடமும், அடிமைப் படல் இயல்பு.

நாட்டின் நாகரிகம்

ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண் மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறதென்பது எவரும் கொள்ளத்தக்க உண்மை.

ஆணுடன் போராடவா பெண்?

ஆண் மக்களுடன் போராடுவது மட்டும் பெண்ணுரிமையாகாது. பெண் ஆணுடன் கலந்து வாழப் பிறப்பிக்கப்பட்டாளன்றி, அவள் ஆணு

டன் போர் புரிந்து வாழ்வைக் குலேத்து இடர்ப் படப் பிறப்பிக்கப்பட்டாள் இல்லே.

பெண்ணின் சிறுமை பேராபத்து

ஒரு பாதியாயுள்ள பெண்ணின் சிறுமை மற்ருெரு பாதியாயுள்ள ஆணையுந் தாக்கி முடிவில் வாழ்வையும் நாட்டையும் குலேக்கும் என்பதை ஆணுலகம் இனி யாதல் உணர்ந்து நடப்பதாக.

ஆண் பெண் ஒழுக்கம்

பெண் ஒழூக்கம் காத்தல் வேண்டும் என்பதை ஒருமுறைக்குப் பன்முறை யான் வலியுறுத்து கிறேன். அவ்வொழுக்கம் ஆண் உலகிற்கும் வேண்டற்பால தென்று அவ்வளவில் வலியுறுத்து கிறேன்.

அடக்கி ஆள்வதா ?

பெண் ஆணே அடக்கப் புகுவதும் தவறு; ஆண் பெண்ணே அடக்கி ஆள்வதும் தவறு; இருவரும் ஒத்து நடத்தலே இன்பம்.

கடவுள்நோக்கம் கடைத்தேற...

பெண்பிறவி இல்லேயேல், கடவுளின் படைப்பு நோக்கம் எங்ஙனம் நிறைவேறும்?

பெண்ணே? பேயோ ?

தாய்மைக்குரிய பெண்ணிற்கு ஒழுக்கம் உயிர் போன்றது. ஒழுக்கமே பெண்ணுக வளர்தல் வேண்டும். ஒழுக்கமிலாப் பெண் பெண் அல்லள். அவள் பேய்.

எல்லாம் இழந்தவள் !

கற்பிழந்தவள் அழகை இழக்கிறாள்; பெண்மையை இழக்கிறாள்; தாய்மையை இழக்கிறாள்; எல்லாவற்றையும் இழக்கிறாள்.

தனித்துச் செல்லல் தவறு

பெண் மக்கள் இனவேற்றுமை கருதாது ஆண் மக்களுடன் விளையாடலாம். வயதேற வயதேறத் தனித்து ஒரு தனி ஆடவனோடு, போதலும் வருதலும், ஆடலும் பாடலும் கூடா. எதைச் செய்தாலும் பெண் மக்களும் ஆண்மக்களும் கூட்டமாகக் கூடிச் செய்யின் வேறு எண்ணத்துக்கு இடமே இராது.

பெருந்தேவியாகும் பெண் !

வயதடைந்த நாள்தொட்டுத் திருமணம் வரை பெண்ணுக்குரிய பருவம் மிக நெருக்கடியானது; சோதனைக்கும் உரியது. அக் காலத்தில் தன்னைக் காத்துக்கொள்ளும் பெண்ணே பின்னைப் பெருந்தேவி யாவாள்.

இயந்திரத்தால் கெடும் ஏந்திழை!

இயந்திரங்கள் பெண் மக்களைச் சோம்பேறிகளாக்குகின்றன; அவர்களின் உடல் நலத்தையும் கெடுக்கின்றன.

நங்கையர் நிலையில் நாட்டுக்குச் செழுமை

ஒரு நாட்டில் செழுமையும், கொடுமையும் அந்நாட்டுப் பெண் மக்கள் நிலையைப் பொறுத்திருக்கின்றன.

தவஞ் சிறந்த நாடு

நோயில்லாப் பெண்களைப் பெற்ற நாடே தவஞ் சிறந்த நாடு!

தெய்வீகப் பெண்

பிறவிக்கேற்ற நலனெலாம் மலர்ந்த நல்வழியில் வளர்ந்து தெய்வ நிலை பெறுபவளே பெண்ணெனுஞ் சொற்பொருளாவள்.

கணவன் இல்லாத் தனி வாழ்வா?

திருமணஞ் செய்து ஒருவனுடன் வாழும் ஒருத்தியின்மீது மற்ற ஆடவர் மனம் பெரிதுஞ் செல்வதில்லை. பதி (கணவன்) இல்லாப் பெண்ணின் மீது பலர் நாட்டங் கொள்வது இயற்கையாய்விட்டது. பதியின்றி வாழ்தல் பலதிற இடுக்கண்களுக்குக் காரணமாக இருப்பது கருதற்பாலது.

இறைவன் நியதியைப் பழிப்பதா?

இயற்கை முற்றும் ஆண்-பெண் வடிவாய் இலங்கும்போது, ஆண் பெண்ணை முனிவதும், பெண் ஆணைக் காய்வதும் இறைவன் நியதியாம் இயற்கையைப் பழித்து வாழ்வைக் குலைத்துக் கொள்வதாகும்.

பாதியாக வாழ்வதா?

பெண்-ஆண் சேர்ந்த ஒன்றே வாழ்வு என்பது. வாழ்வின் ஒரு பாதி பெண்; மற்றொரு பாதி ஆண். இப்பாதியாக இவர் எத்தனை நாள் உலகில் உறைவது? இருபாதியும் சேர்ந்த ஒன்றே முழுமைத் தன்மை.

இறைவன் வழியில் இணைப்பு

இறைவன், பிறப்பில் பெண்-ஆண் வடிவ அமைப்பு வகுத்து இரண்டையும் ஒருமைப்படுத்த இயற்கையில் இன்ப உணர்வளித்துள்ள நுட்பத்தை ஓர்ந்து, ஒருத்தியும் ஒருவனும் அன்பால் ஒன்றி வாழ்வது அவ்விறைவன் வழி நிற்பதாகும். அங்ஙன மின்றி. இருவரும் தனித்து நின்று, இறைவனை மட்டும் வழிபடல், அவ்விறைவன் வழி நிற்பதாகாது.

நல்வாழ்வா? நரக வாழ்வா?

ஆண் மகனும் பெண்மகளும் ஒத்த பண்பு, ஒத்த நலன், ஒத்த அன்பு, ஒத்த கல்வி முதலியன உடையவராய் இருத்தல் வேண்டும். இல்லையேல் இல்வாழ்வு நல்வாழ்வாகாது; நரக வாழ்வாக முடியும்.

மனிதன் ஆகான்

பெண்ணைக் காமத்தின் பொருட்டுக் கொள்வோன் மனிதன் ஆகான்.

பெண்ணை வெறுத்தல் துறவா?

பெண்ணை விடுத்துத் தனியே வாழ்வது மட்டுங் துறவு ஆகாது. துறவாவது மனமாசினின்றும் விடுதலை அடையும் ஒரு பெரும் நிலை. இது பின்னாளில் பெண்ணை வெறுத்தல் என்று கொள்ள பட்டது.

பெண் இல்லாமல் பிறப்பா ?

பெண்ணை வெறுத்துக் கூறும் ஆண்மகன் எங்கிருந்து தோன்றினான் என்பதை எண்ணுவானாக.

பெண்மையே பேசுந் தெய்வம்!

பெண்மை என்பது ஒரு நுண்மை. அந்நுண் மைப் பெண்மைதான் அழகு—பாட்டு—தெய்வம்... பெண்மையின் நுண்மை உணர்வோர்க்கு மாதர் தெய்வம்போல் தோன்றுவர்.

இதுவா தெய்வ மணம் ?

இல்வாழ்க்கைக்குரிய மணங்கள் பல. நம் நாட் டார் அவற்றை எட்டுவிதமாகப் பிரித்துள்ளார். அவற்றுள் சிறந்தது நமது அருமைத் தமிழ் மக் கள் கொண்ட களவு என்னும் காதல் மணமே யாகும். அம் மணவாழ்வு இப்பொழுது மாண்டு விட்டது. இப்பொழுது பெரிதும் நமது நாட்டில் தாய் தந்தையர் பார்த்துக் கொணரும் பெண் ணுக்கு மாலை சூட்டிக்கொள்வது மணமென்னும் பொருளில் வழங்கி வருகிறது. இதற்குப் பெயர் தெய்வ மணமாம்!

தெய்வக் காட்சி எங்கே ?

பெண்ணுலகு சிறுமைப்பட்ட நாள்தொட்டுக் காதல் என்னும் அன்புத் தெய்வக் காட்சியும் அரிதாயிற்று.

இல்லறத்தின் இயல்பு

ஒருவரிடத்துக் கட்டுப்பட்டுக் கிடக்கும் அன் பைப் பின்னை இருவரிடத்தும், பின்னைச் சில உயிர் களிடத்தும், பின்னைப் பல உயிர்களிடத்தும் முடி வில் எல்லா உயிர்களிடத்தும் பரப்புந் தன்மை யுடையது இல்லறம்.

பாழுங் கட்டடம்

இல்வாழ்வில் தலைப்படாத ஒருவனது உள்ளத்தைக் கதவுகளும், மற்றக் கால அதர் (சன்னல்) களும் மூடப்பட்டுக் காற்று நுழையப் பெறாத பாழுங் கட்டடத்திற்கும், ஓட்டமில்லாத நீர்நிலைக்கும் ஒப்பிடலாம்.

ஆண்-பெண் வடிவம்

அன்பு வளர்வதற்கு நிலைக்களனுயுள்ள இல்வாழ்க்கை உலகில் இனிது நடைபெறல் வேண்டுமென்னும் அருட்பெருக்கால் ஆண்டவன் உயிர்களை ஆண்-பெண் வடிவாகப் படைத்திருக்கிறான்.

படைப்பின் நோக்கம்

ஆணும் பெண்ணும் கூடிக் குலாவி அன்புநெறி காண்டல் வேண்டும் என்பது ஆண்டவன் படைப்பு நோக்கம். அந்நோக்கத்தை நிறைவேற்ற முயலாதவன் வாயால் கடவுள் உண்மை பேசுவதால் என்ன பயன் விளையும்?

கடவுள் ஆணைவழி

ஒழுங்குபட்ட இல்வாழ்க்கை நடாத்தும் ஒருவன் கடவுள் ஆணைவழி நிற்பவனாகிறான்.

அழகொளியும் அருளொளியும்

பெண்ணின் உற்ற வயதில் அழகு திரண்டு ஒளி வீசும். அழகொளி, ஆண்டவன் அருளொளி போன்றது. ஆண்டவன் உலகம் அலர்கிறது. பெண்ணின் அழகொளியாலும் உலகம் (பிள்ளைப் பேறு) அலர்கிறது.

தெய்வ அழகு தீஞ்சுவைப் பாட்டு!

ஆண்டவன் படைப்பு நோக்கத்தை நிறைவேற்ற வந்தவளல்லளோ பெண்? அப்பெண்ணின் கற்புத் திண்மையால் அழகு, அன்பருக்குத் தெய்வமாகும்; புலவருக்குப் பாட்டாகும்.

முழுப் பெண் ஆவளோ?

ஒருவனோடு வாழாத ஒருத்தி முழுப்பெண் தன்மை எய்தினவள் அல்லள்.

நன்மக்கள் பார்வையில் பெண் மக்கள்

பெண் பாடசாலைகளும், அவைகளை ஒட்டிய விடுதிகளும் நன்மக்கள் பார்வையில் நடைபெறல் வேண்டும்.

செயற்கை முறை

பெண்ணை வெறுக்கும் எண்ணத்துடன் புலன்களை அடக்குவது செயற்கை முறை என்பது எனது கொள்கை.

வெறுப்பது அறமா?

பெண் ஆண் சேர்க்கை உயிர்களின் துன்ப நீக்கத்துக்கு இன்றியமையாததாயிருக்க, அதை வெறுப்பதும் துறப்பதும் அறமா என்று கேட்கிறேன்.

எங்கிருந்து முளைத்தனர்?

'துறவு துறவு' என்று ஒதுங்கும் பெண்மக்களும் ஆண்மகனும் யாண்டிருந்து முளைத்தனர்?

கருணையிலாக் கற்கள்!

கருணையில்லா மக்களே மணவாழ்வை வெறுப்பார்கள்.

தீயைத் தணிக்கும் தண்புனல்!

காமம், வெகுளி முதலிய நாக்கள் விட்டெரியும் தீயைத் தணிக்கும் அன்பென்னும் தண்புனல் ஊற்று, பெண் தெய்வம் என்பதை உலகம் உணர்ந்து நடப்பதாக.

கடவுளின் கொடை!

குழந்தையோ கடவுளின் கொடை! நாட்டின் செல்வம்!

கருச்சிதைப்பார்க்கு நரகம்

கருச் சிதைக்க ஒருப்படும் மருத்துவர்க்குக் கடவுள் எந்நரகம் படைத்திருக்கிறுனோ தெரியவில்லை.

ஈரமில்லா நெஞ்சம்!

கடவுள் நெறிக்கும், உலக வளர்ச்சிக்கும், நாட்டின் செல்வத்துக்கும், இன்ப வாழ்வுக்கும் உறு கருவியாயுள்ள பிள்ளைப் பேற்றை விரும்பாத நெஞ்சம் ஈரமில்லாததேயாகும். அது பெண்ணுலகிற்கு உரியதன்று. பிள்ளைப் பேறு விரும்பாத பெண், பெண் அல்லள்.

ஆரமுதம்

தாய்-தந்தையர் அன்பினின்று பிறக்கும் ஆரமுதம் குழந்தை என்க.

கருணைக் கடவுள்

கருணையாளன் தள்ளுவானா ?

ஆண்டவன் கருணையாளன்; அவன் நம்மைத் தள்ளமாட்டான்.

ஆண்டவன் பாட்டுக்கு அளவில்லை

இறைவன் நமது விடுதலை குறித்துக் கருணை பொழிந்த வண்ணம் இருக்கிறான். நம்மை உய்விக்க அவன் படும் பாட்டுக்கோர் அளவில்லை.

அழுகை மூலம் அருள்

ஆண்டவனுக்கு உள்ளத்தை ஒப்படைத்தல் வேண்டும். மனந் திரும்பிப் பழைய பாவங்களை நினைந்து நினைந்து, உருகி உருகி, வருந்தி வருந்தி, முறையிடல் வேண்டும்; அழுதல் வேண்டும். அவ்வழுகையின் உண்மை ஆண்டவன் அருளை எழுப்பும்.

மனிதக் கடமையும் கடவுள் கடமையும்

அழுகை ஆண்டவன் அருளைச் சுரப்பிக்குமா என்று ஐயுறுதல் கூடாது. நமது கடமையை நாம் செய்வோமாக. ஆண்டவன் தன் கடமையைத் தான் செய்வான்.

சமயம் இன்றேல் விலங்கு!

மனிதன் சமயவாழ்வை விடுவனேல் என்னுவன்? விலங்காவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சமயச் சிறையா?

தமிழர் அறிவுறுத்திய சமயம் ஓர் எல்லைக்குள் கட்டுப்பட்டுக் கிடப்பதன்று. அஃதொரு சிறைப்பட்ட சமயமும் அன்று.

ஆண்டவன் வடிவம் அன்பே

ஒவ்வொரு சமயத்தையும் துருவித் துருவி ஆராய்ந்தால், கடவுள் ஒருவர் என்பதும் அவர் அன்பு வடிவினர் என்பதும் செவ்வனே பெறப்படும்.

எங்கும் இருக்கும் இறை

'ஆண்டவன் எங்குமுளான்' — என்னும் உணர்வு வளர வளர மக்கள் எக்காரணம் பற்றியும் உயிர்கட்குத் தீங்கு செய்ய ஒருப்படார்கள். எவ்வுயிரிலும் கடவுளிருப்பை உணரும் ஒருவன் கொலை, களவு முதலிய மறவினைகளை ஆற்றுவானோ? ஆற்றான். இவ்வருநெறியே சமய நெறியாகும்.

தீமைகள் ஒழிக்கும் செந்நெறி

கொலை, களவு முதலிய தீமைகளை ஒழிக்க வல்லது சமய நெறி ஒன்றே என்று அறைகூவுகிறேன். அந்நெறி பற்றி ஒழுகுமாறு இளைஞரை வேண்டுகிறேன்.

மனைவி—மக்களும் அவர்களே!

உயிர்கள் சேவையென்று மனைவி மக்களைத் துறந்து ஓடுவது சமய நெறியாகாது. மனைவி, மக்களும் உயிர்களே! அவ்வுயிர்களிலும் ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான். அவ்வுயிர்கட்குச் சேவை செய்ய வேண்டுவது நமது கடமை.

மனித—சமயப் பிணைப்பு

மனிதனை விலங்கினின்றும் பிரிப்பது சமயம்; அத்தகைய சமயத்தை மனிதனும் விடமாட்டான்; சமயமும் அவனை விடாது.

இயற்கை வளர்க்கும் சமயம்

இயற்கை, மனித வாழ்க்கையைப் பொருட் பொதுமையளவில் நிறுத்திவிடாது; சமயத்தை வாழ்க்கையில் புணர்த்தியே தீரும்.

சித்தாந்த சன்மார்க்கம்

'சித்தாந்தம்'—என்ருல் என்ன? 'சன்மார்க்கம்' என்ருல் என்ன? இரண்டும் ஒன்றே. பெயரை நீக்கிப் பொருள் நுட்பத்தில் புகுந்து பார்த்தால் உண்மை விளங்கும். சித்தாந்தம் 'சத்'தையும் பொருளாகக் கொண்டது; அதன் மார்க்கமாகிய இயற்கையுலகின் முதலாக உள்ள மாயையும் பொருளாகக் கொண்டது. இதனுல் சித்தாந்தமும் சன்மார்க்கமும் ஒன்றே என்பது பெறப்படு கின்றது.

சமயப் பொதுமை

சன்மார்க்கத்தைப் பொதுவாகச் சமயம் என்றும் கூறலாம். அது, சைவம், வைணவம், ஜைனம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறது.

சத் பொதுமை; அதன் மார்க்கமாகிய இயற்கையும் பொதுமை. சமயமும் பொதுமையாகவே இருத்தல் வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை

உலகம், சாதி-மதம்-மொழி-நிறம்-நாடு முதலிய வேற்றுமைகளை உடையது. இவ்வேற்றுமைகளைக் கடந்து பொதுமையில் நிற்பது சன்மார்க்கம்.

சன்மார்க்கக் கண்

சன்மார்க்கக் கண் திறக்கப் பெற்ருல் அதன் முன்னே வேற்றுமைகள் எல்லாம் பாழாகும்.

தண்மை மிக்க சன்மார்க்கம்

இக்கால உலக எரியைத் தணிக்கும் ஆற்றல் சன்மார்க்கத்துக்கே உண்டு. சன்மார்க்கம் தண்மை வாய்ந்தது.

சமயநெறி சாதிப்பதென்ன ?

சமயநெறி இவ்வுலக வாழ்வைத் தூய்மைப் படுத்தி, மறு உலக வாழ்விற்கும் அடிகோல்வது.

சமயப் போரின் மடமை

"உலகில் 'பல கடவுளர்', 'பல சமயங்கள்' இருக்கின்றனவே; எக்கடவுளைத் தொழுவது; எச் சமயநெறி நிற்பது?" என்று சிலர் ஐயுறலாம். அப் பன்மையுணர்வு முதலாவது ஒழிதல் வேண்டும். கடவுளர் பலர் இல்லை. சமயங்களும் பலவில்லை. ஆனுல், கடவுளையும் சமயத்தையும் குறிக்கத் தக்க பெயர்கள் பல உண்டு. மொழிகள் பல உள்ள மட்டும் பல பெயர்கள் இருந்தே தீரும். அறிஞர் அப் பெயர்ப் பொருளையே கொள்வர். பெயர்ப் பன்மை கொண்டு சமயப் போரில் இறங்குவது மடமை.

பொதுநலத்தின் விதை

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் வேண்டும் என்னும் எண்ணத்தை விதைப்பது சமய ஞானமாகும். சமய ஞானம் இல்லையேல், ஒப்புரவு முதலிய நல்லியல்புகள் அருகும்.

கோலத்தைக் கொண்டு கொள்கையா?

புறக்கோலங்களையும் வழக்க ஒழுக்கங்களை யும் சமயமாக கருதிச் சமயத்தையே நிந்திக்கிறுர். கோலங்கட்கும், வழக்க ஒழுக்கங்கட்கும், சமயத் துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

எது சமயக் கல்வி?

உலக நேயம் யாண்டும் பேசப்படுகிறது. அந் நேயம் பரவாமைக்குக் காரணம், நாடு-மொழி-நிறம்-வகுப்பு-முதலிய புறவேற்றுமைகளில் மக்கள் கருத்தைப் பதித்திருப்பதேயாகும். மக்கள் அக் கருத்தைச் சிறிது அகமுகமாகத் திருப்பி, ஆன்ம ஆராயச்சியிற் செலுத்தின் அங்கே எவ் வேற்றுமையும் காணப்படா. அவ்வான்ம ஆராய்ச் சியே சமயக் கல்வி என்பது. மற்றக் கல்வித் துறை கள் யாவும் சமயக் கல்விக்கு உடல் போன்றன.

பன்மையில் தொடக்கம் ஒருமையில் முடிவு

தொடக்கத்தில் சமயம் பலபல போலத் தோன் றும்; ஆராய்ச்சி முடிவில் எல்லாம் ஒன்ருகவே புலப்படும்.

கருத்து வேற்றுமையா?

மாணிக்கவாசகனுர் திருவாசகத்துக்கும் கிறிஸ்து பெருமான் சுவிசேஷத்துக்கும் உள்ள கருத்து வேற்றுமை எனக்கு விளங்கவில்லே.

வாதமும் வாழ்வும்

சமய வாதங்களால் விளேயுங் கேடுகளேக் காணுஞ் சிலர், 'சமயமே வேண்டா'-என்று கூறத் தொடங்குகிருர். இஃது ஆராய்ச்சியும் தெளிவுமில்லாதார் கூற்று! சமய வாதத்தை வெறுத்துத் தள்ளுதல் வேண்டுமேயன்றிச் சமய வாழ்வை வெறுத்துத் தள்ளுதலாகாது.

வழிபாடு எப்படி?

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளே எப்படி வழிபடுவது?

உயிர்கள் வழிபாடு எல்லா வழிபாடுகளினுஞ் சிறந்தது.

சிறந்த வழிபாடு எது ?

எவ்வுயிரையும் தன்னேப்போல் கருதி, அவ்வுயிர்க்குத் தீங்கு செய்யாது, நலஞ் செய்யப் புகுவதே சிறந்த வழிபாடாகும்.

கடவுள் தொண்டு எது?

உயிர்களுக்குச் செய்யுந் தொண்டே கடவுளுக்குரிய தொண்டு.

அழுகை மூலம் ஆண்டவன்

மக்கள் தங்கள் குறைகளையும் தவறுதல்களை யும் உணர்ந்து மனந்திரும்ப முயலல் வேண்டும்; மனந்திரும்பி ஆண்டவனை நினைத்து நினைத்து, கசிந்து கசிந்து உருகுதல் வேண்டும்; உருகி உருகி அழுதல் வேண்டும். அழுகை உண்மையுடைய தாயின் ஆலம் (நஞ்சு) ஒடுங்கும்; அமுதம் எழும். களைகண் ஆண்டவனே! அவனை அடைவோமாக!

சமயநெறியைச் சாரும் முறை

அன்பை வளர்த்து வளர்த்து, அன்பில் தோய்ந்து தோய்ந்து, அன்பின் முழுநிலை எய்த முயல்வதே சமய நெறி நிற்றலாகும்.

அன்புள்ளத்தில் பகை எண்ணமா ?

உள்ளத்தில் அன்பு நிலவும்போது எவ்வுயிர்க் காதல்தீங்கு செய்யும் எண்ணம் எழுகிறதா? இல்லை. பின்னை எப்பொழுது தீ நீர்மை இடம் பெறுகிறது? உள்ளத்தில் பகைமை முருகி எழும்போது பிறர்க்குச் செய்யும் தீ நீர்மையும் உடன் எழுகிறது.

அன்பின் குறைபாடே!

தன்னுயிரைப்போல் மன்னுயிரையுங் கருதாமைக்கும் கொலை களவு முதலிய பெரும்பாவ நிகழ்ச்சிகட்கும் மூலமாயிருப்பது எது? அன்பின் குறைபாடேயாகும்.

தீமைக்கு இடந்தராது

முழு அன்பு எத்தீமைக்கும் இடந்தராது.

அன்பே கடவுள்

அன்பாவது, அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீ நீர்மைகள் இல்லாத இடத்தில் பொலிவ தென்பது எவர்க்குந் தெரியும். அவ்வன்பே கடவுள்.

...அவ்வன்புக் கடவுளோடு தொடர்பு கொண்டு வாழ்வதே சமய நெறி நிற்பதென்க!

சாலச் சிறந்த சத்மார்க்கம்

உலக வாழ்க்கைக்குச் சத்மார்க்கம் இன்றியமை யாததென்று யான் வலியுறுத்துகிறேன்.

கருணைக் கங்கை!

சாந்த சிவத்தின் கருணை, கங்கையாய்ப் பெருகிப் பாய்கிறது...... அச்செல்வம், பாரதநாட் டில் ஆங்காங்கே காவியங்களாகியது; ஓவியங் களாகியது. காவிய...ஓவிய அறிகுறிகள் நாடு முழுவதும் பொலிவு தருகின்றன.

சமயமும் சமய வாதமும்

சமயம் வேறு; சமய வாதம் வேறு. சமய வாத த்தைச் சமயமாகக் கொண்டு சிலர் சமயத்தையே தாக்குகிறார்கள். அது தவறு.

பயன் கருதா இறைவாழ்வு!

ஆண்டவன், மக்கட்கு இவ்வுலக வாழ்வை ஏன் நல்குகிறான்? மக்கள் அனைவரும் தன்னைப்போல் ஆதல் வேண்டும் என்பது அவனது நோக்கம். எனவே, இவ்வுலகில் மக்கள் எங்ஙனம் வாழ்தல்

வேண்டும்?... ஆண்டவனைப்போல வாழ்தல் வேண்டும். ஆண்டவன் தனது முற்றறிவிற்கும் முழு முதல் தன்மைக்கும் ஏற்றவாறு பயன் கருதாது கடனாற்றுவதுபோல மக்களும் தத்தம் அறிவாற்றலுக்கேற்ற அளவு பயன் கருதாது கடனாற்றல் வேண்டும்.

உண்மைச் சமயவாதி யார்?

சமய வாழ்வினன், 'நான் எங்ஙனம் உலகில் வாழ்வேன்'—என்று தன் வாழ்வு கருதி நடுக்குறான்; தன் வாழ்வு கருதிப் பிறரைத் துன்புறுத்தான்; பிற உடமையைக் கவரான். பிறரை ஏமாற்றிப் பொய் பகரான். எக்காரணம் பற்றியும் பிறரைத் துன்புறுத்தாது, பிறர் துன்பஞ் செய்யினும், அதை இன்போடு ஏற்றுப் பொறுப்பன்; பிறர் குற்றம் பாராட்டிப் புறங் கூறான்; தன் குற்றங் குறித்து ஆண்டவனை நோக்கி அழுது அழுது உருகுவன்; பிறர் குற்றத்தை மன்னிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பன்; பெண் மக்களைக் காமப் பொருளாகக் கருதான்...உலகைத் துறந்து ஓடான்; உலகிலிருந்தே தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்வன்; கடனாற்றிய வண்ணம் இருப்பன்; எதற்கும் எவர்க்கும் அஞ்சான்; கடவுள் ஒருவர்க்கே அஞ்சுவன்; எதையும் எவரையும் கடவுள் வடிவாகக் கண்டு வழிபாடு செய்வன்: சுருங்கக் கூறின் தனது மனச்சான்று வழி நடப்பன் என்னலாம்.

ஆண்டவனின் வாழ்வு!

பயன் கருதாது கடனாற்றுவோர் கடவுள் தன்மை பெறுதல் இயல்பு. பயன் கருதாது பணி செய்யும் வாழ்வு ஆண்டவன் வாழ்வு போன்றது.

சமய, சமூக சீர்திருத்தம்

இறைவனை ஏமாற்ற முடியுமா?

ஆண்டவனை அடைவதென்றால் கோயிலுக்குப் போய் அதனை வலம் வருவதா? எங்கும் கண் கொண்டு பார்க்கும் ஆண்டவனை ஏமாற்றல் இயலாது. அவனுக்கு எல்லாந் தெரியும்.

இராவணன் எடுத்த கைலாயம்

இறைவனை உளங் கொள்ளாமலும், அவனடியில் அடைக்கலம் புகாமலும் ஆணவத்தால் தருக்கிச் செருக்கித் திரியும் சிலர் கூடிப் புதுஉலகம் அமைக்கப் புகுவது இராவணன் கயிலாயம் எடுக்கப் புகுந்த கதையாய் முடியும்.

ஆணவத்தால் அன்புலகா?

ஆணவ எழுச்சியால் உண்மைப் புது உலகம் அமைதல் அரிது.

ஆணவத்தினின்றும் ஆணவ உலகமே தோன்றும்.

பொதுமை உணர்த்துவது என்ன?

'பொதுமை' இப்பொழுது எங்கணும் பேசப்படுகிறது; பொதுமைப் பேச்சு எதை உணர்த்துகிறது? இறைவன் உண்மையை மக்கள் தெளிந்து வருவதை உணர்த்துகிறது.

போலிச் சமயத்தைப் புதைப்பீர் !

வருங்காலத்தில் ‘சமயப் போலி’ ஒழிந்து, “சமய உண்மை’ நிலவும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளு வோமாக.

புறக்கோலத்தில் பொருந்துமா?

நாடோறுமோ, வாரந்தோறுமோ திங்கள் தோறுமோ, விரத நாட்களிலோ ஒரு சிறு பொழு தைக் கோயிலுக்கென்று செலவழிப்பது சமயம் ஆகாது. சமயம் புறக்கோலத்தளவில் மட்டும் கட்டுப்பட்டு நிற்பதும் அன்று.

உலகுக்கு ஒவ்வாதவை?

உலக வாழ்க்கையை நீத்தல் வேண்டும் என்னும் கொள்கையும் உலகமே பொருள் என்னும் கொள்கையும் மன்பதையின் நலத்துக்கு உரியன வாகா.

ஆண்டவனின் அன்பளிப்பு

ஆன்மாவின் அறியாமையைப் போக்க வேண்டும் என்னும் நோக்குடன் ஆண்டவனுல் இவ்வுடல், இவ்வுலகம் முதலியன வழங்கப்பட்டி ருக்கின்றன. ஆண்டவன் கொடையாக உள்ள இவ்வுடலையும், இவ்வுலகையும் துறப்பது ஆண்ட வனை மறப்பதாகும்.

இயற்கைக்கு ஏற்றதன்று

எல்லாவற்றையும் விடுத்து ஓடுமாறு உண் மைச் சமயம் அறிவுறுத்தவில்லை. ஆண் பெண்ணை வெறுத்தலும், பெண் ஆணை வெறு த்தலும் இயற்கைக்கு மாறுபட்டு நடப்பது.

மனந்திருந்தா மனிதன்

ஐயன் நமக்கென்று தநு, கரண, புவன போகங் களைக் கொடுத்தான்; திருக்குரான், பைபிள், திரிபிடகம், பரமாகமம், உபநிஷத், நாலாயிரம், தேவார திருவாசகம் முதலிய மறைகளை அடிய வர் மூலம் அருளினன்; அவ்வப்போது அனுப்பி னன். அறக்கருணைக்கு உலகம் ஆளாகவில்லை; மனந் திரும்பவில்லை; இப்பொழுது ஆண்டவன் மறக்கருணை குண்டாய்ப் பொழிகிறது. இவ்வாறு எனக்குத் தோன்றுகிறது.

எது சமய வாழ்வு?

சின்னந் தரித்தல், கோயில் போதல், பூசை செய் தல் முதலியன மட்டுஞ் சமய வாழ்வாகா. நாடோ றும் இவைகளை ஒருபோழ்து குறைவற ஆற் றிப், பெரும் பொழுது பொய் சொல்வதிலும், பிறர் பொருள் கவர்வதிலும் இன்னோரன்ன பழிபாவச் செயல்களிலும் ஒருவன் கண்ணுங் கருத்துமாயி ருப்பது எங்ஙனஞ் சமய வாழ்வாகும்? இத் தீமை களினின்றும் விலகி வாழ்வது சமய வாழ்வாகும்.

பிறப்பிலே பேதமா?

நமது நாட்டில் பண்டைக் காலத்தில் பிறப் பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதியில்லை. அவ் வேற்றுமை இடைக் காலத்தில் நாட்டிடைப் புகுந் தது.

நாட்டைக் கெடுக்கும் நஞ்சு

சாதி வேற்றுமை உள்ள மட்டும் சாதிப் பூசல் கனன்று கொண்டேயிருக்கும். சாதி வேற்றுமை அறவே ஒழிந்தாலன்றி நாட்டுக்கு நலன் விளைதல் அரிது.

இளைஞர் மனங்கொண்டால்

இளைஞர் மனங்கொண்டால் சாதி வேற்றுமையைத் தகர்க்கலாம்.

இளைஞர் ஓய்வு நேரங்களில் வெளிநாடுகளுக்குச்சென்று திரும்புவரேல், அவர்களுக்குச் சாதி வேற்றுமையில் வெறுப்புத் தோன்றும். பலநாட்டார் கூட்டுறவு, சாதி அழிவுக்கு ஏதுவாகும்.

கலப்புமணம் விளைக்கும் நன்மை

கலப்பு மணம் நாட்டில் பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே சாய்ந்து படும்.

மறுமணத்தைத் தடுத்தல் அறமா?

இளமை மணத்தையும் விலக்காது மறுமணத்தையும் தடுப்பது அறமாகாது.

சீர்திருத்தும் சிறந்த நூல்

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதிக் கொடுமை தாண்டவம் புரிந்த வேளையில் அக்கொடுமை களைய அக்கால நிலைக்கேற்ற வண்ணஞ் சீர்திருத்தஞ்செய்ய எழுந்த தமிழ்நூல் ஒன்று உண்டு. அதுவே பெரிய புராணம் என்பது.

பெரிய புராணத்தில் கலப்பு மணம், உடனுண்ணல், பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனர் குருவாகக் கோடல், எந்நிலையில் நின்றும் எவ் வேடங்கொண்டும் ஆண்டவனை வழிபடல் முதலிய பல சீர்திருத்தங்கள் நிலவுகின்றன. இவை இக் காலத்துக்கு வேண்டற்பாலன என்று யான் சொல்லலும் வேண்டுமோ?

ஆண்டவன் திருக்கோயில்

ஆண்டவன் உறையும் திருக்கோயில்களாகிய ஏழை மக்கள் உடலில் தீண்டாமை ஏது? ஆண்டவன் இயற்கை நிலையங்களைத் தீண்டாத் திருமேனி என்று இகழ்ந்து கூறுவது ஆண்டவனை இகழ்ந்து கூறுவதாகும்.

எந்த மையும் இல்லை

கடவுளிடத்து அன்புடையார்க்குத் திண்மை இல்லை; வேறு எந்த மையும் இல்லை.

கண்மூடி வழக்கம் மண்மூடிப் போக

அஞ்சா நெஞ்சுடன் கட்டுப்பாடுகளையும் கண்மூடி வழக்கங்களையும் உடைத்தெறிதல் வேண்டும்.

இழிவு! இழிவு!

விபசாரத்துக்குச் சாதியில்லை. மதமில்லை! வெளிப்படையாகத் திருமணஞ் செய்வதற்கு மட்டும் சாதியும் மதமும் குறுக்கிடுகின்றன! இழிவு இழிவு!

இன்னும் ஏன் தீண்டாமை?

நாட்டின் கலை, செல்வம், நாகரிகம், அரசு எல்லாம் போயின. நாடு வறுமைக் குழியில் வீழ்ந்து வருந்துகிறது. இன்னுமா தீண்டாமை?

அநாகரிகம்

பிறப்பில் தீண்டாமை வருவது கொடுமை; வன்கண்; அநாகரிகம்.

தேச பக்தி ஏது

பிறப்பில் தீண்டாமை கருதப்படும் இடத்தில் தேசபக்தி எங்ஙனம் இடம் பெறும்?

கண்மூடி வழக்கம் மண்மூடிப் போக

கண்மூடி வழக்கங்கள் பல நாட்டுக்கேற்ற வாறு ஆங்காங்கே ஆட்சி பெற்றிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக இறக்குவதே அறிவுடைமை.

இருளை ஓட்டும் ஒளி

கல்வியறிவுக் குறைபாடே கண்மூடி வழக்கங் கட்குக் காரணம். கல்வியறிவு ஒளி படரப் படரக் கண்மூடி வழக்கங்கள் என்னும் இருட்குழாம் தானே இரிந்தோடும்.

தமிழர் அறியாத் தாழ்வு-உயர்வு

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் இழிவு பழந் தமிழர் காலத்தில்லை. பின்னரே இவ்விழிவு தமிழ் அகத்தில் நுழைந்தது.

கடவுள் அன்பே கருவி

தமிழ் மக்களிடையே சாதிப்பேய் தாண்டவம் புரிந்த காலத்திலேயே நாயன்மார் தோன்றினர். அவர், சாதிக் கோட்டையைத் தகர்க்கக் கடவுள் அன்பு என்னுங் கருவி கொண்டனர்.

தீண்டாமை வேண்டுவதா?

பிறப்பில் தீண்டாதான் என்று சொல்லப்படு வோனுக்கும் மற்றவனுக்கும் என்ன வேற்றுமை

இருக்கிறது? பின்னைத் தீண்டாமை யாண்டிருந்து முளைத்தது? மக்கள் செய்த கற்பனை என்னே! என்னே! அக்கற்பனையால் விளைந்துள்ள கேடுகளைக் கண்ணுரக் கண்டும் இன்னுமா தீண்டாமை பாராட்டுவது?

சமயத்தில் ஒட்டாச் சடங்கு

சடங்குகட்குஞ் சமயத்துக்கும் தொடர்பில்லை. சடங்குகள் வேறு; சமயம் வேறு. இரண்டையும் ஒட்டவைத்தல் அறியாமை.

தாய்மொழி மந்திரம்

நல்வினை தீவினைகட்குக் குறிப்பிட்ட ஒரு வகுப்பார் அல்லது வினைகளாற்றக் குறிப்பிட்ட ஒரு மனிதன் வேண்டுவதில்லை. அவ்வக் குடும்பத்திலுள்ள ஒரு முதியோரைக் கொள்வது நலன். மந்திரம் குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே அமைதல் வேண்டும் என்னும் நியதி இல்லை. அவரவர் தத்தம் தாய் மொழியில் மந்திரம் வகுத்துக் கொள்ளலாம்.

கோயில் வழிபாடு ஏது?

மிகப் பழைய காலத்தில் கோயில் வழிபாடு கிடையாது. அந்நாளில் இயற்கை வழிபாடொன்றே வழக்கிலிருந்தது. மீண்டும் அவ்வழிபாட்டைப் புதுக்க வேண்டுமென்பது எனது தணியா வேட்கை.

நிதியிலே நீதியா?

கோயில்கட்கென நிதி ஏற்பட்ட நாள்தொட்டுக் கோயில்களின் உண்மை நிலைமைக்கு ஊறு ஏற்பட்டது.

நிதியுள்ள இடத்தில் நீதி நிலவுமோ?

போலித் துறவால் புன்மை !

போலித் துறவு, வாய் வேதாந்தம் இவைக ளால் நாடு உற்றுவரும் அல்லலுக்கோர் அள வில்லை. அத் துறவில் அவ்வேதாந்தத்தில்— இளைஞர்களே! எக் காரணம் பற்றியும் கருத்துச் செலுத்தாதேயுங்கள். மனைவி மக்களோடு வாழ்ந்து, கெட்ட எண்ணங்களைக் களைந்து எவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் செய்கை வேதாந்தத்தில் தலைப்படுங்கள்.

சமயத்தைச் சாய்க்கும் சடங்குகள்

இந்நாட்டில்—நமது நாட்டில் நடைபெற்று வரூஉஞ் சடங்குகளில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவற்றில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கிறேன். ஒன்று சடங்குகளைச் சமயத்துடன் தொடர்பு படுத்துவது; மற்றொன்று பிறப்பில் குறிக் கொண்டு நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ, தேசிகனையோ, பார்ப்பானை யோ பிறனையோ அழைப்பது; இன்னொன்று குறிப் பிட்ட ஒரு மொழியிலேயே மந்திரஞ் சொல்ல வேண்டும் என்பது.

அருளை அழிக்கும் சாதி

கோயில்களில் சாதிப்பேய் தாண்டவம் புரி கிறது. பிறப்பை ஒட்டிய சாதி வேற்றுமை கோவி லில் என்று நுழைந்ததோ அன்றே அங்கு ஆண்ட வன் அருள் மணமுங் குலைந்தது.

கோயில் வழிபாட்டில் குறைபாடு

ஆண்டவன் வழிபாட்டிற்கெனக் கோயில் ஏற்பட்டது. அதன் நோக்கத்துக்குக் கேடு நேரின் முறையை மாற்றிக் கொள்வதே அறிவுடமை. தற்

காலக் கோயில் வழிபாட்டால் இயற்கை எண்ண மும் உயிர்கள் வழிபாடும் அருகுகின்றன.

கடவுள் பக்தியை விடலாமா ?

கோயில் முறை கோணிய காரணங்கொண்டு ஆண்டவன் அருள் நெறியை எவரும் விடுத்தலா காது.

அறக்கடவுளின் புறமுதுகு ?

சாதிக்கொடுமையும், பெண் கொலையும் நிகழும் ஓரிடத்தில் நீதிக் கடவுள்—அன்புக் கடவுள்—அறக் கடவுள்—வீற்றிருப்பனோ?

இயற்கையில் வாழும் இறைவன்

தொடக்கத்தில் கோயில் அமைப்பும் வழி பாடும் பொருளுடையனவாகவே யிருந்தன. 'இயற் கையின் உறையுள் இறைவன்'—என்னும் உண்மை யை அறிவுறுத்துங் கருவிகளாகவே அவை துணை புரிந்து வந்தன. நாளடைவில் அவை தங்கள் நோக்கினின்றும் வழுவி வீழ்ந்தன.

ஆலயங்களில் அநீதியா ?

எருசலேமில் கோயில்களின் பாழ்பட்ட நிலை யைக் கண்ட கிறிஸ்து பெருமான் கோயிலைக் 'கள் ளர் குகை' என்று சொற்றதையும் தற்போது நமது கோயில்களின் சீர்கெட்ட நிலையை நோக்கி மகாத்மா காந்தி கோயிலை 'வேசையர் விடுதி' என்று கூறியதையும் ஈண்டு உங்கட்கு நினைவூட்டுகி றேன். சில இக் கிராமங்களில் மிகச் சில கோயில் கள் ஆண்டவன் நினைவூட்டும் அன்பு நிலையங் களாக இன்றும் நிற்கின்றன.

உள்ளம் பெருங்கோயில்

எவரெவர்க்கு எவ்வெச் சமய வேதத்தில் அன்பு நிகழ்கிறதோ அவரவர் அவ்வவ் வேதத்தைப் படிக்கலாம். ஆண்டவன் அருள்பெற்ற அடியார் மொழிகளே நமது வாழ்வுக்குக் கொழுகொம்பு. அவர்தம் அருண்மொழித் துணையால் நமது உள் ளத்தையே கோயிலாக்கிக் கொள்ளலாம்.

உள்ளத்தைக் கோயிலாக்கிக் கொள்வோர் உயிர்கள் வழிபாட்டிலேயே உறைந்து நிற்பர்.

ஞானம் தேடிக் கானகமா ?

மெய்யறிவு என்னும் ஞானம் பெற எவருங் காட்டுக்குப் போகவேண்டுவதில்லை; நடுநாட்டில் மனைவிமக்கள் உற்றார் உறவினர் இவரோடு வாழ்ந் தும் பலவகைத் தொழில்களைச் செய்தும் ஞானி யாகவே இருக்கலாம்; வேண்டுவது ஒன்றே. அது,

'நாம் பிறர்க்காக வாழ்கிறோம்' என்னும் எண் ணங்கொண்டு வாழ்வதேயாகும்.

ஆராய்தலே அறிவுடைமை

பழமையில் நல்லனவும் இருக்கலாம்; தீயனவும் இருக்கலாம்; அங்ஙனே புதுமையிலும் தீயனவும் இருக்கலாம்; நல்லனவும் இருக்கலாம். பழமை, புதுமை என்னும் அளவில் நின்று ஒன்றைத் தள் ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமையாகாது. அதன் அதன் தன்மைகள் நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் கொள்ளல் விதிப் பது அறிவுடைமை.

நாத்திகர் நல்லவர் !

சமயப் போரிடுவோரைப் பார்க்கிலும் நாத்திகர் நல்லவர் என்பது எனது கருத்து.

உண்மைச் சமயத்துக்கு ஒவ்வாது

உலகில் இழிந்த ஒன்று சமயப் போரே ஆகும். உண்மைச் சமயம் போரிடுமாறு அறிவுறுத்தவில்லை.

ஆண்டவன் அவதாரங்களா ?

கல்வியாலோ, மருந்தாலோ, மந்திரத்தாலோ, வேறு எதனுலோ ஏற்படும் செல்வாக்கால் எத்துணைப் போலிச் சந்நியாசிகள் கடவுள் அவதாரங்களாக உலகில் போற்றப்படுகிருர்கள் ? இவ்வறியாமை என்று உலகை விட்டு அகலுமோ? உலகம் என்று உய்யுமோ? ஆண்டவனே!

உண்மைத் துறவு

மனமாசைத் துடைத்தலே உண்மைத் துறவு. இத்துறவிக்குக் குறிபிட்ட காலம், இடம் முதலியன வேண்டுவதில்லை.

போலித் துறவு

உயிர்கட்குத் தொண்டு செய்யப் புறப்படுவோர் சிலர் மனைவி மக்களைத் தொல்லை என்று தொலைத்துத் 'துறவு' என்னும் பெயரால் வெளியேறுகிருர். இது போலித் துறவன்றி உண்மைத் துறவாகாது.

மக்கட்குரிய வாழ்வு

இல்வாழ்க்கையிலிருந்து தொழில் பல புரிந்து அறவழியில் பொருளீட்டி உயிர்ச்சார்பு கொண்டு,

எவ்வுயிரையும் நேசித்து, இயன்ற உதவி செய்து வாழும் வாழ்வு மக்கட்குரிய வாழ்வெனக் கொள்க.

ஆண்டவன் அன்பனு ?

'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்று பாடிக் கண்டதைத் தின்று, கள்ளுண்டு, பொருட் பெண்டிர் இன்பந் துய்த்து, உடலில் ஒன்றரை அங்குல அழுக்கேறி ஊறத் திரிபவன் ஆண்டவன் அன்பன் ஆகான்.

இயற்கைத் தாயின் எழில்

பாரே பல்கலைக் கழகம் !

இவ்வுலகம் பெரிய பல்கலைக் கழகம். மலையுங் காடும் ஆறுங் கடலும் பெருங்காவிய ஓவியங்க ளல்லவோ?

பெரிய சாத்திரம்

இயற்கையே பெரிய சாத்திரம்.

இறை எது ?

எல்லாவற்றிற்கும் நிலைக்களனாயுள்ள ஒன்றே இறை என்பது. இறை, மனிதன் உள்ளிட்ட எல்லா வற்றிலும் நீக்கமற நிற்குந் தொடர்பு கொண்டது. இத்தொடர்பற்ற உயிருமில்லை; பொருளுமில்லை; இடமுமில்லை; எதுவுமில்லை.

இயற்கையில் வாழும் இறைவன் ?

உயிர் உடல் போலக் கடவுளும் இயற்கையும் இருக்கின்றன. இத்தொடர்பை நோக்கியே கட வுளை அப்பனென்றும் இயற்கையை அன்னையென் றும் புலவர் கூறிப் போந்தனர்.

இயற்கை வழி இறைவழி

இயற்கையின் வழி மனிதன் நிற்க நிற்க அவன் கடவுளின் அருள் துணையைப் பெற்று அருளாளன் ஆவன். இயற்கைக்கு மாறுபட்டு

நிற்பவன் கடவுள் துணை பெறுது மருளனும் இடர்ப்படுவன்.

இயற்கை உணர்த்தும் உண்மை

இறைவனது உண்மையை உணர்த்துங் காட்சிப் பொருள் இயற்கை வாயிலாகவே இறைவன் அருள் தொழில் நிகழ்ந்து வருகிறது.

கானலை நம்பும் கதை

இயற்கையை விடுத்து, இறைவனை உணர முயல்வது கானற் சலத்தை (கானல் நீரை) நம்பி ஓடினவன் கதையாக முடியும். இறைக்குரிய வழி இயற்கை, இயற்கையே.

இரண்டறக் கலந்தவை

இறை-இயற்கை என்னுஞ் சொற்களைக் கொண்டு, இரண்டிற்கும் பிரிவு கற்பித்தல் கூடாது; இறைவனை விடுத்து இயற்கை இயங்குவதில்லை. இயற்கையை நீத்து இறைவன் கடனாற்றுவதில்லை.

கடவுளை வெறுப்பதாகும்

கடவுளின் படைப்பை வெறுப்பது கடவுளை வெறுப்பதாகும்.

இயற்கையில் தோன்றிய பெண்

உலகம் கொடியதாயின் கடவுள் படைப்பில் அவ்வுலகம் அமைய வேண்டியதில்லை. பெண் மாயையாயின், அப் 'பொருளும்' இயற்கையில் தோன்ற வேண்டியதில்லை.

மாண்புள்ள மனிதன்

உண்மை மனிதன் யார் ?

மனிதன், உலகு - உயிர் - கடவுள் என்னும் மூன்றையும் ஆராய்ந்து தெளிவனேல் அவனது அறியாமை முற்றும் தேய்ந்தொழியும்.

அறியாமை முற்றும் அகன்று முழு அறிவு விளக்கம் பெறுகிறவனே உண்மை மனிதன்.

தெய்வமும் விலங்கும்

மனிதனிடம் விலங்கு நீர்மையும் உண்டு; தெய்வத் தன்மையும் உண்டு.

* * * *

மனிதனை, விலங்கு தன் பக்கல் ஈர்க்கும்; தெய்வம் தன் பக்கல் ஈர்க்கும். இப்போராட்டத்திடைத் திகைக்கும் மனிதன் தெய்வத்தின் பக்கமே சார்ந்து நிற்க முயலல்வேண்டும். அம்முயற்சியில் தலைப்படும் அன்பனுக்கு ஆண்டவனது அருள் துணை புரியக் காத்துக் கொண்டிருக்கிறது. பின்னை அதன் துணையால் விலங்கு நீர்மைகளை கல்லி விடலாம்.

ஐந்து நெறிகள்

மனிதன் முதலாவது பொய்க்கு அஞ்சி நடக்கப் பழகல் வேண்டும்; இரண்டாவது நாச்சுவை அடக்கும் பயிற்சி பெறல் வேண்டும். மூன்ருவது புறங்

கூறலை நிறுத்த முயலல் வேண்டும். நான்காவது ஈகைத் தன்மையைப் பெருக்கல் வேண்டும். ஐந்தாவது தான் செய்யும் பிழை குறித்து வருந்தி வருந்தி மீண்டும் அப்பிழை தன்பால் உருதவாறு ஆண்டவனை நோக்கி வழுத்தல் வெண்டும்.

மனிதப் பிறவியின் நோக்கம்

மனிதப் பிறவியின் நோக்கம், உயிரை அறியாமை என்னும் கட்டினின்றும் விடுதலை செய்வித்து அதை அகிம்சையில்—அருள் நெறியில்—நிறுத்தி, முழு அறிவுநிலை என்னுங் கடவுள் நிலையை அதற்குக் கூட்டுதல் வேண்டும் என்பது.

எது வாழ்க்கை ?

தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன்; அவனது வாழ்க்கையே வாழ்க்கை.

ஐயறிவும் மெய்யறிவும்

மெய்யறிவு ஆருவது அறிவெனும் மனவுணர்வு. அவ்வறிவு பெருது ஐந்தறிவோடு வாழ்பவன் மக்கட் பிறவி எய்தாதவனேயாவன். ஐயறிவுடைய விலங்கினுக்கும் மெய்யறிவில்லா ஒருவனுக்கும் என்ன வேற்றுமை?

மனித தெய்வம் யார் ?

மெய்யறிவால் விளையும் நலங்களைச் சொல்லுதல் முடியுமோ? அவ்வறிவால் மனிதன் தெய்வம் ஆகிருன்.

இன்ப வாழ்வு எது ?

அச்சமில்லா அறவாழ்வே இயற்கை எளிய இன்ப வாழ்வாகும். ஆதலால் இயற்கை வழி நின்று, எளிய உணவு கொண்டு, எளிய உடை அணிந்து, எளிய இன்ப அன்பு வாழ்வை நடாத்த மனிதன் பயிற்சி செய்யக் கடவன்.

மனித வாழ்வின் குறிக்கோள்

உலகில் மனிதன் கல்வி பயிறலும், தொழில் புரிதலும், மனைவி மணத்திலும், புதல்வரைப் பெற லும், ஒழுக்கங் காத்தலும், இன்னபிற கோடலும் எற்றுக்கு? முடிவில் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் பெருநிலை எய்தற்கேயாம்.

அறநெறியாளர் கடமை

பழிக்குப்பழி வாங்கல், புறங்கூறல், ஆரவாரம், கொடுமொழியால் பிறரை வைதல் முதலியனவும், அகிம்சா தர்மத்துக்கு மாறுபட்டவைகளாகும். அறநெறி நிற்போர் அவைகளைக் கடிந்தே தீர்வர்.

யார் மனிதன் ?

மனிதனுக்கே ஆறறிவு உண்டு. ஆறுவது அறிவே மன உணர்வு எனப்படும்...அது பகுத்தறிவு என்றுஞ் சொல்லப்படும். (அந்த) மன உணர்வுடையோன் மனிதன் என்க.

உண்மை மனிதன் இயல்பு

ஆறுவது அறிவு விளங்கப் பெற்று, அதன் வழி நிற்கும் மனிதன், தன்னுயிரைப் போலவே

மன்னுயிரையும் பார்ப்பன். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும். அவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன் வாழ்க்கை 'மற்றவர்க்கே' என்று அவன் கருதுவன். அவன் கொலை, களவு, கள், காமம், பொய், என்னும் ஐம் பெரும் பாவங்களுக்கு அஞ்சுவன். அவன் கரணங்களெல்லாம் அன்புவண்ணமாகப் பொலியும். விலங்கியல்பு அவனிடத்தில் தோன்றுதல் அருமை. அன்னான் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கொள்வன். இன்னோரன்ன இயல்புகள் வாய்ந்த ஒருவனையே மனிதன் என்று கூறலாம்.

மனிதச் சட்டையில் மாக்கள்!

இப்பொழுது உலகத்தில் பலர் மனிதச் சட்டை போர்த்து மாக்களாக (விலங்குகளாக)த் திரிதல் வெள்ளிடைமலை. அன்னார் இன்னும் மனிதராய் வாழ்கின்றாரில்லை. உலகத்தில் மக்கள் கூட்டம் பெருகல் வேண்டும்; மாக்கள் கூட்டம் அருகல் வேண்டும். அந்நாள் எந்நாள்?

தனித்து வாழும் இனத்தவனா?

மனிதன் கலந்து வாழும் உயிர்த் தொகையில் சேர்ந்தவனன்றித் தனித்து வாழும் இனத்தில் சேர்ந்தவன் அல்லன்.

தன்னலந் தவிர்க்க...

மனிதன் தன்பாலுள்ள தன்னலமென்னுங் கொடுமையை அகற்ற, ஏனைய மக்களோடு கலந்து கலந்து பல வழியிலும் வாழ்வானாக; உழல்வானாக.

அங்ஙனம் வாழ வாழ - உழல உழல — அவனுக்குப் பிறர் துன்பமறியும் உணர்வு பிறக்கும்.

தன் துயர் போக்க...

பிறர் துன்பத்தை உணர்வது தன் துன்பத்தைப் போக்க அடிகோல்வதாகும். பிறர் துயரைப் போக்கக் கடனுற்றுகிறவன் தன் துயரைப் போக்கிக் கொண்டவன் ஆவன்.

தொலையாத் தொல்லை

உலகில் எதையுந் தொல்லை என்று கருதிக் கொண்டிருக்கு மட்டும் தொல்லை மனிதனை விட்டகலாது.

எது ஒப்புரவு ?

ஆண்டவன் இருப்பை மனைவி, மக்களில்— உற்ருர் உறவினரில் — மட்டுங்கண்டு அன்பு செலுத்துவதோடு, அவன் இருப்பை எவரிடத்துங் கண்டு அன்பு செலுத்துவது ஒப்புரவு (பரோபகாரம்) ஆகும்.

துன்பந் துடைக்கும் மருந்து

மனிதனது துன்பத்தைப் பொன்னும் பொருளும், காணியும், பூமியும், கூடமும் கோபுரமும் மின் விளக்கும் விசிறியும் மோட்டார் வண்டியும் ஆகாய விமானமும் ஒரு நாளும் போக்குவன ஆகா. துன்பத்தைக் களையவல்லது ஒன்றே. அஃது ஒப்புரவு.

துன்பம் அறியாத் தூயன் யார்?

எவ்வுயிரையும் தன்னுயிரெனக் கொண்டு, உயிர்கள் நலங் கருதி உழைக்கும் ஒருவன் உள்

ளத்தில் ஒப்புரவிற்குரிய அன்பாகிய தெய்வம் விளங்கும். அவனே துன்பம் அறியாத் தூயன்.

ஒப்புரவு உணர்வு அரும்ப...

உலக வாழ்வில் மனிதன் வீழ்ந்து புரண்டாலன்றி ஒப்புரவு உணர்வு அரும்பாது.

அரசு - சட்டம் - சேனை தேவையா?

மெய்யறிவுடையார் உலகிற்கு அரசு எற்றுக்கு? சட்டம் எற்றுக்கு? சேனை எற்றுக்கு? அவர் மனமே எல்லாம்.

அஃதே அரசு; அதுவே சட்டம்; அதுவே சேனை.

உள்ளமே குரு!

ஒருவனது உள்ளம், ஒருவன் வாழ்விற்குக் குரு போலவும், அரசு போலவும் வழிகாட்டுவதாயிருத்தல்வேண்டும்.

எது மெய்யறிவு?

மறந்தும் பிறர்க்குக் கேடு மனத்தாலும் மொழியாலும் செயலாலும் நிகழ்த்தாதவாறு காத்துவருவது மெய்யறிவு.

பொறுமைப் பிள்ளை

வாய்மையை அப்பனாகவும் மெய்யறிவை அன்னையாகவும் யான் கொள்கிறேன். இவ்விரண்டுங் கூடி ஈனும் பிள்ளை பொறுமை என்று யான் கூறுவேன்.

எது அடககம்?

நெறியல்லா நெறிச் செல்வதினின்றும் தன்னைக் காத்தலே அடக்கம் என்பது. முற்றுஞ் செயலின்மை அடக்கம் ஆகாது.

நாவடக்கம் என்றால் என்னை? நாவைச் செயலின்றிச் செய்வதா? அன்று. கண்டதைத் தின்னலாகாது என்பது அதன் பொருள்.

'வாயடக்கமாயிரு'—எனில், 'பேசா ஊமையாயிரு' என்றோ பொருள் கூறுவது? பேசத் தகாததைப் பேசாதே' என்பதன்றோ அதன் உண்மைப் பொருள்!

செயலின்மையா? செந்நெறியா?

'அடக்கம்' என்பதற்குச் செயலின்மை கொள்ளாது, அறிவுவழிச் செந்நெறியில் நின்றொழுகல் என்று கொள்ளக் கடவோமாக.

போலியான புலனடக்கம்!

அறிவு கெடும் முறையில், சிலர் புலனடக்கம் என்னும் பெயரால், பெண்ணை வெறுத்து, யோகம் யோகம் என்று போலி யோகம் செய்து, மண்ணீரல் இயக்கங் கெடுத்து, உடல் வெளுப்பேறச் சோகை, காமாலை, இருமல் முதலிய நோய்வாய்ப் பட்டு வாழ்வைக் குலைத்துக் கொள்கின்றனர்.

வீரம் எது?

வீரம் எது? பொருமையினின்றெழும் மூர்க்க சக்தியே பெரிதும் வீரம் என்று வழங்கப்படுகிறது; அது தவறு...அஃது அச்சமாகும்.

பிறர் வெகுண்டெழுந்து துன்புறுத்தும்போது அதைப் பொறுத்தலே வீரம்.

காந்தியடிகள் வீரம்

கோழைமையால் துன்பம் பொறுத்தல் வீரமாகாது; அன்பால் அதைப் பொறுத்தலே வீரம். அன்பினின்றும் வீரம் பிறத்தல் வேண்டும். இவ் வீரத்துக்கு இலக்கியராகப் பண்டை நாளில் மார்க்கண்டர், பிரகலாதன், சோக்ரதர், கிறிஸ்து, திருநாவுக்கரசர் முதலியோர் விளங்கினர். இற்றை நாளில் மகாத்மா காந்தி அவ்வீரத்தைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிருர்.

வாழ்வைக் குலேக்கும் பாவி

திருடனுக்கு இன்பம் ஏது? அச்சமன்ருே அவனே என்றும் நடுக்குறச் செய்துகொண்டிருக்கும்! செயற்கைச் செல்வத்தில் வீழ்ந்து தூர்த்த வாழ்வு நடத்துவோன், தன் வாழ்வைக் குலேத்துக் கொள்வதோடு மற்றவர் வாழ்வையும் குலேக்கும் பாவியாகிருன்.

தெய்வநிலேயில் உய்ய...

மனிதன் தான் செய்யுங் குற்றங் குறித்து நாடோறும் வருந்தும் பயிற்சி பெறுவானுயின், அவன் பால் உள்ள தெய்வம் அவனுக்குத் துணே புரிந்து அவனேத் தன்மயமாக்கிக் கொள்ளும்.

எது துறவு?

துறத்தலாவது அழுக்காறு முதலியவற்றின் காரணமாகவுள்ள செருக்கு, பற்று முதலியவற்றினின்றும் நீங்குதலாகும்.

சிவகதி சேர்க்கும் சீலம் !

சிவகதிக்குச் சீலம் தேவை; இன்றியமை யாதது.

சீலம் வளரச் சீரிய வழி?

...சீலத்தை எப்படி வளர்ப்பது? பொருட் பொதுமை முறையன்றி வேறு புலப்படவில்லை. ஆகவே, பொருட் பொதுமை சமயத் தொடர்புடைய தென்று தெளிக.

ஆத்ம விடுதலை

அகத் தூய்மையில்லா ஒருவன் பல கேடு களுக்கு அடிமையானவன். உலகில் எத்துணைப் பேர் பொய்மை, பொருமை, சீற்றம், காமம் முதலிய வற்றிற்கு அடிமையாளராய் உரிமை இழந்து நிற் கிறுர் என்பதை விளக்க வேண்டுவதில்லை. இக் குற்றங்களினின்று விடுதலை அடைவது ஆத்ம சுயராச்சியம் என்பது.

கடவுளைப் பெற்றவன் யார் ?

பொறுமையைப் பயிற்சி செய்தல் அருமையி னும் அருமை, பொறுமை என்பது எளிய பொரு ளன்று. பொறுமையைப் பெற்றவன் கடவுளைப் பெற்றவன் ஆவான்.

வாழ்வின் செம்பொருள்

மனிதன் தன் வாழ்வில் முடிவாகப் பெற வேண்டிய செம்பொருள் பொறுமையே.

பொறுமையின் நான்கு தூண்கள்

பொறுமையர்பால் சிறப்பாக விளங்க வேண்டிய அடக்கம், உள்ள நிறை, உண்மை, அன்பு என்னும் நான்கும் மக்கள் வாழ்வைப், 'பல வழியிலும் பண்படுத்தும் என்க.

மலருள் மணம்போல்...

நெருப்பில் வெம்மை இருப்பது போலவும், மலரில் மணம் இருப்பது போலவும், மெய்யறிவு விளங்கப்பெற்ற பொறுமையன்பால், பயன் கருதாது பிறர் நலம் நாடி உழைத்தல் இயல்பாய் அமைந்து கிடப்பதாகிறது.

வாய்மை எல்லாம் வழங்கும்

வாய்மை என்னுஞ் சீரிய அறத்தை ஒருவன் கடைப்பிடித்து ஒழுகுவானுயின், அவன்பால் பிற அறங்களெல்லாம் தாமே அமையும். வாய்மை, அறத்துள் தலையாயது; ஆணி போன்றது; உயிர் போன்றது. அஃதுள்ள இடத்தில் எல்லாம் இருக்கும்.

பொறுமையே வெல்லும்!

உலகம் பொறுமை பொருமை என இருவேருகப் பிரிந்து நிற்பினும் பொறுமையே பொருமையை வெல்லும் என்பது உறுதி.

பொறுமையனும் பொருமையனும்

பொறுமையன் ஆன்ம சக்தி துணைகொண்டு வாழ்வன்; பொருமையன் தேகசக்தி துணை கொண்டு வாழ்வன்...அவன் (பொறுமையன்)

உள்ளத்தில் அருள் என்னுந் தண்புனல் சுரந்து கொண்டேயிருக்கும்; இவன் உள்ளத்தில் வன்கண் என்னும் வெம்மை எரிந்து கொண்டே யிருக்கும். பொறையுடையான் எண்ணமும் சொல்லும் செயலும் பிறர்க்கு நலம்புரிவதில் குறிக்கொண்டுநிற்கும். பொறையிலான் முக்கரணமும் முற்றும் மாறுபட்ட வினைநோக்கி நிற்கும். பொறையுடையான் பிறர் தன்னைத் துன்புறுத்தும்போது அத்துன்பத்தைக் களைய வேறு ஒருவர் உதவியையாதல், கருவிகளையாதல் தேடான். மற்றவன் என் செய்வன்? அஞ்சி ஓடுவன்; அல்லது கருவி கொண்டு எதிர்க்க முயல்வன். பொறையுடைய புனிதன் இனிமை செய்யவே முயல்வன் பொறையில்லாத புன்மையனோ இனிமை செய்வோர்க்கும் இன்னா செய்யச் சூழ்ச்சி தேடுவன். அவனுக்கும் இவனுக்கும் உள்ள வேற்றுமை கடலினும் பெரிது.

சான்றோர் இல்லா உலகமா?

இயற்கை அன்னை, சான்றோர் வாயிலாகவே உலகை நடாத்துகின்றனள். சான்றோர் இல்லையேல் உலகம் ஏது? வாழ்க்கை ஏது?

மார்க்சியமும் காந்தியமும்

மார்க்சியத்துக்கும் காந்தியத்துக்கும் உள்ள ஒற்றுமையும் எனக்கு விளங்குகிறது. வேற்றுமையும் எனக்கு விளங்குகிறது. இரண்டுக்கும் அடிப்படையாயுள்ள கொள்கையில் பெரிதும் வேற்றுமை இல்லை என்பதும், கொள்கையை நிறைவேற்றும் முறையில் வேற்றுமை உண்டு என்பதும் எனது ஆராய்ச்சியில் தோன்றும் உண்மையாகும்.

அழகும் மதிப்பும் உடையிலா?

உடலில் இல்லாத அழகும், ஒழுக்கத்தில் இல்லாத மதிப்பும், உடையில் எங்கிருந்து முளைக்கின்றனவோ தெரியவில்லை!

எளிய உடையில் இன்பம்

எளிய உடை இயற்கை வாழ்வுக்குத் துணை செய்யும்.

* * *

சுமை சுமையாக உடையணிவது தவறு. சுமை, உடல் வளத்தை நாளடைவில் குலைத்து விடும்.

* * *

நாட்டின் இயற்கை வளத்துக்கு ஏற்ற உடையணிதல் அறிவுடைமை.

* * *

பட்டாடை முதலியவற்றில் உயிர்க்கொலை உண்மையால் அவை அணிதற்பாலன அல்ல. உயிர்க்கொலைக்குரிய எதையும் மனிதன் ஏற்றலாகாதென்று சுருங்கச் சொல்கிறேன்.

எது தொண்டு?

பயன் கருதிச் செய்யப்படும் வேலை தொண்டாகாது. பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். தொண்டு என்பது அடிமை வேலையன்று; அது தெய்வப் பணி.

தியாகி யார் ?

தனக்குள்ள எல்லாவற்றையும் உவகையோடு பிறர்க்களிக்கும் மனமுடைமை தியாகத்தின் இயல்பு. 'தனக்கென ஒன்றுண்டு'—என்று கருது கிறவன் தியாகி ஆகான்.

மகாத்மா ஆக்கியது எது?

இம்மண்ணுலகில் காந்தியடிகளை மகாத்மா வாக்கியது எது?

அவரது தியாகம்.

அகிம்சா தர்மம்

எல்லாக் குணநலன்கள் உற்றதும் எல்லாக் குணக்கேடுகள் அற்றதுமாயிருப்பது அகிம்சா தர்மம். மனிதன் தன்பாலுள்ள குறைகளெல்லாம் நீங்கப்பெற்று அடையும் முடிந்த நிலை அகிம்சா தர்மம்.

தன்னைப்போலப் பிறரை நேசி

தீமைக்குத் தீமை செய்யாது, அன்புள்ளத்தால் தீமையைப் பொறுமையோடு ஏற்று, ஒல்லும் வகை நலஞ் செய்யும் ஒருவனே தன்னைப் போலப் பிறரை யும் நேசிக்க வல்லவனாவன்.

கருத்து வேற்றுமையில் கனியும் அமைதி

உண்மை விளக்கத்துக்குக் கருத்து வேற்று மை இன்றி அமையாதது. உண்மை விளங்க விளங்க அமைதி நிலைபெறுதல் இயல்பு. ஆகவே, அமைதிக்குக் கருத்துவேற்றுமை துணை செய்வது கருதற்பாலது.

அறப் புரட்சி

உலகம் எத்தனையோவிதப் புரட்சிகளைக் கண்டது. கொள்ளைப் புரட்சிகளும், கொலைப் புரட்சிகளும் நமக்கு வேண்டா. அவைகள் கொள்ளையையும் கொலையையுமே பெருக்கும். நமது நாட்டில் நிகழ்ந்த அறப்புறட்சிகள் நம் கண்முன்னே நிற்கின்றன. அவைகளைக் குறிக்கொண்டு நடப்போமாக.

நம் நாட்டுப் புரட்சி வீரர்கள்

விருஷபதேவர், புத்தர், சம்பந்தர், சங்கரர் முதலியோர் பெரும் பெரும் புரட்சி வீரர். அவர்கள் அகிம்சையாலும், சீலத்தாலும். பாட்டாலும், அறிவாலும் புரட்சிசெய்தார்கள்.

அன்புப் புரட்சி

இப்பொழுதும் ஒரு புரட்சி தேவை. அப்புரட்சியை என்னென்று அழைக்கலாம்? அன்புப் புரட்சி என்று அழைக்கலாம். அதற்கு மனந் திரும்பிப் பாவங்களை முறையிட்டு அழும் பணி வேண்டும். அப்பணி செய்ய விரைவோமாக.

உள்ளொளி ஓங்குக

உள்ளொளியே ஆன்ம சக்தி

'ஆன்ம சக்தி' விளங்க ஒண்ணுதவாறு அதை முடிக்கொண்டிருப்பன, பொருமை, அவா, வெகுளி முதலிய தத்துவக் குப்பைகள். அக்குப்பைகளைக் கல்வியால், இல்லறத்தால், வாய்மையால் மெய்யறிவால், கூட்டிப் பெயர்த்தெடுத்ததும் பொறுமையெனும் மணி ஒளிரும். அதன், வாயிலாக ஒளிரும் உள் ஒளியே ஆத்ம சக்தி என்பது.

ஆத்ம சக்தி அடைந்தவன்

ஆத்ம சக்தி கைவரப் பெற்றவன் தனக்கென உடல், தனக்கெனப் பொருள், தனக்கென ஆவி என்று தன்னல வாழ்வு நடாத்தாது அவற்றைப் பிறர்க்கெனக் கொண்டு ஒப்புரவு வாழ்வு நடாத்துவன்.

ஆத்மஞானியின் இலக்கணம்

'ஆத்மசக்தி' எய்திய ஒருவனுக்குத் தாய், தந்தை, குரவன் இறைவனே. நிராசை அவன்றன் மனைவி. எல்லா உயிரும் அவன் பிள்ளைகள். அவனைப் போன்றவர் அவனுடைய உறவினர். ஊரில் அட்டப்படும் சோறெல்லாம் அவனுடையன. பூமியே அவனுக்குப் பாய். இறைவன் பொருள் எல்லாம் அவனுடைமை. அவனுக்குச் சிறை வாழ்வும் பிறவாழ்வும் ஒன்றே. அவன் சென்றது கருதாமலும், நாளை சேர்வது நினையாமலும் வாழ்வன்.

ஆண்டவன் வடிவாகிய இயற்கை அன்னையோடு நேரே உறவாடும் உரிமையை அவன் பெறுகிறான்.

ஆத்மஞானியை அரசனும் பணிவான்

முழு ஆத்மசக்தி கைவரப் பெற்றவன் நினைக்கின்ற வண்ணம் எல்லாம் இயங்கும். அவனை ஐந்து பூதங்களென் செய்யும்? கருவிகளென் செய்யும்? சேனைகளென் செய்யும்? புலி, கரடி, சிங்கம் முதலிய விலங்குகளும் அவனைக் காணின் பணிந்து செல்லும். மன்னன் அவன்வழி நிற்கும்; சுருங்கக்கூறின் உலகம் அவன் வழி இயங்கும் என்னலாம்.

ஆத்மஞானியிடம் ஆண்டவன்

ஆன்ம சக்தியை அடைந்த—அவன் உள்ளத்தில் ஆண்டவன் தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுவன். அவன் உள்ளம் பெருங்கோயில். அவனைக் கடவுளாகவும் கொள்ளலாம். தொழலாம்.

மனிதப் படைப்பு ஏன்?

மனிதன் எற்றுக்குப் படைக்கப்படுகிறான்? ஆத்ம சக்தி பெறுதற்கன்றோ?

ஆன்மசக்திக்கு ஆதாரம்

தியாக உணர்வு ஆன்ம சக்தியை எழுப்ப வல்லது. ஆன்மசக்திப் போரே சத்தியாக்கிரகம் என்பது.

உள்ளொளி ஓங்குக!

மக்கள் உள்ளொளி பெறுங் கல்வி, அறம் முதலிய துறைகளில் நண்ணி உழைத்தல்வேண்டும்.

உள்ளொளி பெருகப் பெருக அஞ்ஞான இருள் இரிந்தொழியும்.

உள்ளொளி மிக்க உண்மையாளர்

உள்ளும் புறமும் ஒத்த உண்மையாளர்க்கு அச்சம் யாண்டிருந்து முளைக்கும்? அஞ்சா நெஞ்சினரே உள்ளதை உள்ளவாறு உரைக்கும் ஆன்ம சக்தி வாய்ந்தவர். அங்கீரார் (தன்மையர்) என்றும் நடுநிலை பிறழ்ந்து ஒரு வினையையும் நிகழ்த்த ஒருப்படார்.

உள்ளொளியின் ஆணிவேர்

தியாகம் ஒருவனது பரு உடல் உணர்வை அரித்து அரித்து உள்ளொளியை (ஆத்மசக்தியை) ஒளிரச்செய்யும்.